
183



# இரத்தினகிரி பாலமுருகன் அந்தாதி

வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்

இயற்றியது


அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில் வெளியீடு

இரத்தினகிரி, கீழ்மின்னல் - 632 517.

மூலமும், உரையும்



பாலமுருகனடிமைகளார்



உ

முருகன் துணை

# இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன்

# அந்தாதி

ஆக்கியோர் :
வாகீச கலாநிதி
**கி. வா. ஜகந்நாதன்**
(ஆசிரியர் : கலைமகள்)

பதிப்புரிமை - வெளியீடு
பாலமுருகனடிமை
அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில்
இரத்தினகிரி - கீழ்மின்னல் 632 517. தமிழ்நாடு

உரிமை பதிவு
**1984**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | இரத்தினகிரி பாலமுருகன் அந்தாதி |
| ஆசிரியர் | : | வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன் |
| முதற்பதிப்பு | : | 1984 |
| மறுபதிப்பு | : | 6-2-2003 இரத்தினகிரி பாலமுருகன் திருக்கோயில் திருகுடமுழுக்கு நாள் |
| நூலின் அளவு | : | 5.5" x 8.5" |
| பக்கங்கள் | : | 56 |
| வெளியிடுவோர் & உரிமைபதிவு | : | பாலமுருகனடிமை<br>அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில்<br>இரத்தினகிரி, கீழ்மின்னல் - 632 517.<br>தமிழ்நாடு. |
| ஒளிஅச்சு | : | **K.P.** பிரிண்ட்செட்,<br>உரிமை : **K.N.** ஆறுமுகம், B.E.,<br>87, காட்பாடி சாலை,<br>(T.P.K. நகர் எதிரில்)<br>வேலூர்-632004. ☎ 2223502 |
| அச்சிட்டோர் | : | பக்கம் மறுதோன்றி,<br>30. வாலாஜா சாலை,<br>சென்னை – 600 002.<br>தொலைபேசி : 2853 0100, |

# காஞ்சீபுரம்
# ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள்
# அருளுரை

காஞ்சீபுரம், 24.4.1984

ஞானமே வடிவமாக உள்ள பரமேசுவரன் கருணையே வடிவமாக உள்ள அன்னை பரதேவதை பர்வதராஜ புத்திரியான பார்வதி தேவி இவர்களின் புதல்வனாய் ஞானப்பழமாய் விளங்கும் முருகப்பெருமானின் அருளைப் பெறுவதற்கு உதவியாக நமது ப்ரிய சிஷ்யர் வாகீச கலாநிதி ஸ்ரீ கி.வா. ஜகந்நாதன் அவர்களால் ''இரத்னகிரி அருள்திரு பாலமுருகன் அந்தாதி'' என்ற நூலைப் பாலமுருகனடிமை ரத்னகிரி ஸ்வாமிகள் அவர்களால் வெளியிட இருப்பதை அறிந்து சந்தோஷிக்கிறோம்.

சுப்ரமண்ய ஸ்வாமியின் பெருமைகளை விளக்கும் ஸ்காந்த புராணத்தில் கூறப்பட்ட தத்வங்கள் அனைத்தும் இந்த அந்தாதி 106 பாக்களில் ரத்னச் சுருக்கமாகவும், தெளிவாகவும் கம்பீரமாகவும் அமைந்துள்ளன. மலைமகளின் மகனானபடியால் எங்கும் மலையின் மேல் இருந்து அருள் பாலித்து வரும் முருகப்பெருமான் தந்தைக்கும் ப்ரணவோபதேசம் செய்த காரணத்தால், ''தகப்பன்ஸ்வாமி'' என்ற புகழுடன் விளங்குபவரைத் தமிழ் மக்கள் தமிழ்க்கடவுள் என்று அன்புடனும் பக்தியுடனும் போற்றப்படும் முருகனை வழிபடுவதால் தந்தையான பரமேசுவரன், தாயான பார்வதி தேவி இருவர்களையும் வழிபடுவதால் ஏற்படும், ஞானம், கடாக்ஷம், இரண்டும் ஒரே இடத்தில் கிடைப்பதற்கு ஸாதனமாக அமைந்த இந்த அந்தாதி நூலின் மூலமாக முருகனை வழிபட்டு மக்கள் அனைவரும் ஸகல மங்களங்களையும் அடைந்து பரம க்ஷேமமாக வாழட்டும் என்று ஆசிர்வதிக்கிறோம்.

*நாராயண ஸ்மிருதி.*

சிவ சிவ

*தன்கடன் அடியேனையும் தாங்குதல்*
*என் கடன் பணி செய்து கிடப்பதே.*

**தவத்திரு**
**குன்றக்குடி அடிகளார்**

குன்றக்குடி-623 206
இராமநாதபுரம் மாவட்டம்.
தொலைபேசி: குன்றக்குடி-27
நாள் : 15.7.1984.

# வாழ்த்து

ஓங்கி உயர்ந்த குன்றுகள் தோறும்
குன்றக் குடியின் குன்றின்உச் சியிலும்
அலைகடற் கரையின் எழிலிடம் மீதும்
ஏதும் அறியா எமதித யத்தும்
எழுந்தருளச் செய்யும் எழில்மிகு செவ்வேள்
இளைய குமரனாய், இரத்தின கிரியில்
பாங்குடன் அமர்ந்து பால முருகன்
அடிமையின் தூய அன்பினை நுகர்ந்து
இனிதருள் புரியும் ஏற்றமார் இயல்பினன்;
வாகீச கலாநிதி வண்டமிழ்க் கவிஞர்
சகமெலாம் போற்றும் சகந்நா தன், அவ்
அந்தமில் பொருளுக்கு அந்தாதி பாடினன்.
மொழிக்கு மொழிதித் திக்கும் பாடலாய்
நின்றுருகிப் பாடற்கோர் நெஞ்சுருக்கும் பாடலாய்
அமைந்தஅந் தாதியை அனுதினம் போற்றி
ஓதுக ; ''நெஞ்சே உனக்கொன்று சொல்லுவன்''
என்றே அழைத்து இனியநற் றமிழால்
தூயவன் துணையடி தொழுதிடச் செய்திடும்
நயமிகு பாடல் நானிலம் வாழிய !
''விதியே, விதியே,'' என்றுவெந் துயரில்
செத்திடும் மாந்தரைச் சேர்த்தணைத் தெடுத்து
''விதியையும் வெல்லலாம் (24)'' வேலன் துணையினுல்
எனும்துணி வதனை எடுத்து மொழிந்து
தலையெழுத் தழித்திடும் தகுநூல் வாழிய !
செவ்வேள் திருவடி தோய்ந்தநெஞ் சமைவொடும்
செந்தமிழ் பழகும் சிறந்தநன் ஞெவொடும்
ஆசு கவிகள் அளப்பில பொழியும்
முகிலெனத் திகழும் தகைசகந் நாதன்,
பைந்தமிழ்ப் பால முருகன், இதுயத்(து)
ஊற்றெழும் அன்பில் உவந்து குளித்து
விளையா டிடும்நம் வேலன், இரத் தினகிரி
அமர்ந்தருள் செய்யும் ஐயனின் மாண்பார்
அருளினை அள்ளி வழங்கிடும்
அந்தமில் அந்தாதி நந்தமிழ்க் கனியே !

(ஒ-ம்) அடிகளார்.

---

*அருள் மாமுனிவர்*
*தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகள் அவர்கள்*
*இரத்தினகிரி, கீழ்மின்னல்-632517. வேலூர் மாவட்டம், தமிழ்நாடு.*

**பாலமுருகனடிமை**
**அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில்**
இரத்தினகிரி, கீழ்மின்னல் - 632 517
வட ஆற்காடு மாவட்டம், தமிழ்நாடு

# அணிந்துரை

*அன்புடையீர்,*

*அருளாசி.*

*இரத்தினகிரி மாமலையில் திருக்கோயில் கொண்டு திகழும் எம்பிரான் பாலமுருகன் இந்த அடிமைக்கு ஆசி வழங்கி இன்றைக்கு பதினாறு ஆண்டுகளாகின்றன.*

*''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்ற குறிக்கோளுடன், கற்பூரத்திற்கும் கதியற்றுக் கிடந்த இந்த சிறு கோயிலைப் பெருங்கோயிலாக்கப் பலப்பல திருப்பணிகளைப் பக்தர்கள் காணிக்கை கொண்டு செய்து வருகிறேன். எல்லாம் அவன் திருவருள் ஆக்ஞை.*

*கல் கொண்டு திருப்பணி செய்துவரும் இந்த அடிமை, கரையாத கற்கண்டனைய சொல் கொண்டு திருப்பணி செய்தால், அது இறவாத புகழெய்துமே என்றெண்ணிப் பல நாட்கள் சிந்தித்ததன் பயன், இந்த ''இரத்தினகிரி பாலமுருகன் அந்தாதி'' எவரைக் கொண்டு இப்பணியினை நிறைவு செய்வது என்று யோசிக்கும் காலை, எந்தை அருளாளன், ''இவரைக் கொண்டு செய்'' என்பது போல வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதனுரை எனது நினைவில் தேயாத நிறைமதியாய்த் தோன்றச் செய்தான்.*

*தமிழ்த் தாத்தா, மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமி நாதையருடைய மாணவர் நமது வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதனுர். நீண்ட நெடுங்காலமாக ஒரு தரும பத்தினியின் மெட்டிச் சத்தம்போல விளங்கிவரும், ''கலைமகள்'' எனும் திங்கள் இதழின் ஆசிரியர் இவர். ''காந்தமலை'' என்று தமது இல்லத்துக்குப் பெயர் தந்து கந்தனை உபாசிக்கும் சிந்தனைச் சிற்பி இவர்.*

அன்னுருக்கு எனது கருத்தினைக் குறித்துக் கடிதம் எழுதினேன். பதில் வரவில்லை. ஆனுல், ''அந்தாதி'' வந்து சேர்ந்தது. ஒரே நாளில் உபவாசம் இருந்து எழுதிய அந்தாதி இது. எந்தை பாலமுருகப் பெருமானே வேல் தாங்கிய கோலமுடன், அன்னுர் நூல் தாங்கிய திருநாவில் நடம்புரிந்த விந்தையை என்னென்பேன் !

அன்று அபிராமிக்கு அந்தாதி பாடிப் புகழுடம்பு எய்திஞர் அபிராமபட்டர். அவர் மறுபிறவி கொண்டது போல அமைந்திருக்கிறது, இந்த இரத்தினகிரி பாலமுருகன் அந்தாதி.

தொட்ட இடமெல்லாம் தோகைமயில் முருகனின் சங்கத்தமிழ்ச் சிரிப்பு நம்மை அவனேோடு சங்கமிக்கச் செய்கிறது.

விட்ட குறையோ ? தொட்ட குறையோ ? எனது இந்த எளிமையான பணிக்கு இந்நூல் கிரீட கீதம் இசைக்கிறது. சுட்ட பசும் பொன்னுய்த் திகழும் ஆத்மாக்களுக்கு இது ஓர் அருமருந்து. நெஞ்சுக்கு அறிவுறுத்தலும், முறையீடும், வேண்டுகோளும், கழிந்ததற்கு இரங்கலுமாகவும், அகத்துறையிலும் அமைந்துள்ள இப்பாமலர்கள் மணம் கமழ்ந்து மனத்தை நெகிழச் செய்பவை.

''இந்த நூல் ஓதுவார் இன்புறுக'' என்கிருர் நம் கி. வா. ஜ. ஆம் ! இந்ந நூலை இயன்ருல் தினமும் ஓதுங்கள். இயலவில்லையானுல் ஒவ்வொரு மாதமும் வளர்பிறைச் சஷ்டியில் ஓதுங்கள். எல்லா நலன்களையும் இனிதே பெறுவீர்கள்.

நமது சமகாலத்தில் இப்படி ஓர் அற்புதச் சொற் சிற்பியைக் கண்டதில் நாம் பெருமை அடைகிருேம்.

இரத்தினகிரி வாழ் பாலமுருகன், வாகீச கலாநிதிக்கு எல்லா நலன்களையும் அருளப் பிரார்த்திக்கிறேன்.

**இறை நலம் நிரம்பிட வாழ்த்தும்**

**பாலமுருகனடிமை**

# முகவுரை

இந்த அந்தாதிப் பாடல்களில், ''முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் சொல்லும் வைத்து எழுதலாம்'' என்னும் நன்னூல் சூத்திரப்படி, கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, கம்பராமாயணம், பத்துப் பாட்டு முதலியவற்றில் உள்ள சொற்களையும் பொருள்களையும் அப்படியே வைத்து எழுதியிருக்கிறேன்.

இந்த அந்தாதிக்கு ஒரு குறிப்புரையையும் எழுதியுள்ளேன். அதில் பல நூல்களிலிருந்து விரிவாக மேற்கோள்களைக் காட்டியிருக்கிறேன்.

அன்பன்,

**கி. வா. ஜகந்நாதன்**

உ

முருகன் துணை

# இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன்

# அந்தாதி

திருமகள் மார்பன் மருகன், அழகன், திறல்உடையான்,
அருள்மிகு கின்ற இரத்தின நற்கிரி ஆர்பெருமான்,
மருவும் குறமகள் நோக்கிற் கலந்து வருந்தியவன்,
குருஎனும் பால முருகன் திருவடி கூர்துணையே. (1)

துணையும் தொழும்தெய்வ மும்பெற்ற தாயுடன், சுற்றமுமாய்
இணையும் குமரன், இரத்தின நற்கிரி ஏய்ந்தகுகன்,
பணைஎனும் தோளுடை வள்ளி அணைந்த பரம்பரனை
அணைந்து வணங்குவார் எந்நாளும் அச்சம் அகன்றவரே, (2)

ஏதும் இணையிலா வீரம் உடையவன், எண்ணமதிற்
கோது சிறிதும் இலாதவர் போற்றக் குதுகலிப்பான் ;
வாதில் இரத்தின மாமலைப் பால்என்றும் வாழ்பெருமான் ;
சாதுவாம் பால முருகன் அடிமையுள் தங்குவவே. (3)

தங்கம் பெரிதென்று வீணே முயன்று தவிப்பவர்கள்
மங்குவர் ; பால முருகன் மருவிய மாமலையாம்
துங்க இரத்தின நற்கிரி மேவிய சுந்தரனை,
மங்களப் பால முருகனை வாழ்த்தின் வளம்வருமே. (4)

வருவதும் போவதும் ஆய பிறப்பு மரணத்தினில்
மருவுறு துன்பம் அகற்றஎன் ருல்ஓர் வழிசொல்லுவன் ;
திருவுறும் சீர்கொள் இரத்தின நற்கிரித் தேவனையே
குருஎனப் போற்றி வணங்கிடின் இன்பம் குலவுறுமே. (5)

குலவுவர் ; மாதர்கள் தம்மொடு கூடிக் குதுகலிப்பர் ;
நிலவிய வாழ்வினை வீண்ஆக்கி என்றும் நிலைபெறும்அம்
மலைமுகன் சேவடி வாழ்த்தா திரத்தின மாமலையில்
நிலைபெறும் பால முருகனை ஏத்திடின் நீடும்இன்பே. (6)

இன்பம் இனிமேலும் வேறென்றுண் டென்னவே எண்ணல்இன்றி
மன்பெரும் சீர்கொள் இரத்தின நற்கிரி வாழ்முருகன்,
அன்பிற் சிறந்தவன், பால முருகன் அடிமைதொழும்
பொன்பெற்ற கீர்த்தி வடிவேற் குமரனைப் போற்று நெஞ்சே (7)

நெஞ்சே, உனக்கொன்று சொல்லுவன் ; கேள் ; இந்த நீள்நிலத்தில்
எஞ்சாத இன்பம் உறவேண்டின் ரத்தின ஏர்மலையில்
துஞ்சாத தேவர் தொழுகின்ற வேலன் துணையடிகள்
நம்சார்பென் றெண்ணினுல் வாராத இன்ப நலம்வருமே. (8)

வருவார் பலர் ; வந்து தம்குறை தீர்வர் ; மகிழ்ச்சியுடன்
மருஆர் திருமணம் செய்யப் பெறுகுவர் ; மாமுருகன்
திருவீறு கின்ற இரத்தின நற்கிரிச் சேய்அடிகள்
வெருவறப் போற்றித் தொழும்அவர் பேறு விளம்புமதே ? (9)

விளம்புகைக் கெட்டாத வீரம் உடையவன், வேல்முருகன் ;
உளம்புக எண்ணிடின் எல்லாம் உதவும் உயர்அருளான் ;
களம்பெறும் ரத்தின நற்கிரி மேவிய கார்மயிலோன் ;
தளம்பெறும் சேவடி போற்றித் துதித்தால் தவம்அதுவே. (10)

தவம்செய்ய என்றெண்ணிக் கானகம் தேடித் தழையைஉண்டு
பவமதை நீக்கல் மிகஎளி தோ ? அருட் பாவலவன்
சிவமார் அருண கிரிநாதன் போற்றிய சேய்அடியைக்
குவலயம் போற்றும் இரத்தின நற்கிரி கூடுகவே. (11)

வேதனைக் குட்டிச் சிறையிட்ட வேலன், விரும்புபவர்
வேதனை நீக்கிப் பிறப்பறுப் பான் ; ரத்தின விற்கிரியில்
நாதனைப் போற்றி வணங்குமின் ; என்றும் நலம்பெறலாம் ;
சீதள வாரிச பாதனைப் போற்றித் திகழுமினே. (12)

மின்இடை மாதர் மயக்கினில் வீழ்ந்து விழற்கிறைத்த
நன்னிற நீர்என்ன வாணுளை வீணுக்கி நாசம்உறத்
துன்னிடின் என்பயன் ? ரத்ன கிரிஉறை துங்கவனும்
மன்னவன், பூந்தாட் சரவணன் பாதம் வணங்குமினே. (13)

சரவணப் பொய்கையில் தோன்றிய வாறுபேர் தாம்சுரந்து
மருவிய பாலினை உண்ட பிரான்ரத்ன மாமலையில்
திருவுருப் பால முருகன் அடிமைக்குத் தேசுபெற
அருளிய நாதன் அருள்உறின் வாரா தவைஉளவோ ? (14)

உளத்தும் நினைமின்கள் ; வாயாற் புகழை உரைத்திடுமின் ;
திளைக்கும் இரத்தின நற்கிரி வேலன் திருவடியில்
இளைப்புற வீழ்ந்து பணிமின்கள் ; எந்த இனலும்அறும் :
களைப்பிலா நன்முயற் சிக்கண் பயன்உறும், காமுறவே. (15)

காமர்கள் ஆயிரம் பேர்எனி னும்கவின் காலில்உள
தாம்அந்தத் தூசினுக் கொவ்வா ரெனின்எழில் சாற்றுமதோ ?
வாம மருங்கில் உமைமகிழ்ந் தேபால் வழங்கஇன்பம்
ஏமம் உறப்பெற்ற ரத்ன கிரியனை ஏத்துநெஞ்சே ! (16)

சேய், குகன், கார்த்திகை மாதர் தருபால் தெவிட்டியதால்
ஆய்தரு பாலைக் குடித்தான் ; இரத்ன அரும்கிரியில்
வேய்தரு தோள்வள்ளி நாதன், குமரன், விளங்குகிருன் ;
பாய்தரும் அன்புடன் அன்னுன் திருத்தாள் பணிகுவமே. (17)

பணிஅணி ஈசன் பிரணவத் தின்பொருள் பண்புடனே
அணிபெற ஓதுகென் றேசொல அங்ஙன் அருளியவன்,
திணிபெறு தோளன், இரத்தின நற்கிரி சேர்முருகன்
மணிஅணி தாளை வணங்கிடின் காலன் வருகைஇன்றே. (18)

இன்றுநாம் போகுவம், நாளைக்குப் போகுவம் என்றெண்ணியே
நன்றுறும் வாணுளை வீணுக்கித் தாமதம் நண்ணல்இலா
தொன்றிய அன்புடன் இன்னே இரத்தின ஓங்கலினில்
வென்றிகொள் பால முருகன் திருவடி வீழ்குமினே. (19)

வீழ்ந்த அரசர்கள் எத்துணை பேர் ? அவர் வேந்தர்என
வாழ்ந்தவர் என்றந்தக் காலன் விடுவனே ? மானிடர்காள்,
சூழ்ந்து பணிமின்கள் ; ரத்ன கிரிப்பால சூரியனும்
தாழ்ந்து வணங்கும்அப் பால முருகன்றன் தாள்உறுமே. (20)

உறும்தார கன்துணை ஆகிஅத் தேவர்க் குலைவுசெய்த
வெறும்கிர வுஞ்ச கிரியினைச் செஞ்சுடர் வேல்எடுத்தே
அறும்படி செய்தவன், ரத்தின நற்கிரி ஆண்டிருப்பான்,
நறும்கடப் பந்தார் அணிகுகன் சேவடி நாடுமினே. (21)

நாடும் விழைவெல்லாம் நீயிர் பெறல்ஆம், அயிலவன் நற்பதத்தைக்
கூடின் ; இதுதிண்ணம் ; ஐயம் இலை ; நீர் குறிக்கொண்டவன்
பாடும் புகழ்பெறும் பாதத்தை ஏத்திப் பணிகுமினோ ;
வீடும் பெறல்ஆகும் ; இம்மையில் வாழ்வும் விளங்குறுமே. (22)

மேயநல் வீரம் உறுவாகு வைத்தூது விட்டவுணன்
சேய திருத்தாள் பணிய அமரர் சிறைவிடுத்தாய் ;
போய பிழைகள் பொறுத்திடு வான்எனப் போந்துசொல
ஆயவன் சற்றும் தணிகிலன் தன்இகல் ; ஆர்விதியே. (23)

விதியையும் வெல்லலாம் அன்னவன் தாள்இணை வீழ்ந்திறைஞ்சின் ;
சதிசெயும் என்றன் தலைஎழுத் தெல்லாம் தவிர்ந்ததென்று
மதிகொள் அருண கிரிநாதன் சொன்ன வகைஎண்ணுமின் ;
அதிசயம் அன்றிது ; நம்தலை மேல்எழுத் தற்றிடுமே. (24)

அற்றவர்க் கீமின் ; அவர்க்கருள் செய்மின் ; அடல்மிகுந்த
கொற்றவன், ரத்ன கிரிஉறை பாலன் குரைகழலை
உற்றன்பி னோடு தொழுதிடின் எல்லாம் உமக்குவரும் ;
பற்றறும் ; வீடும் பெறலாம் ; இதுபலர் பார்த்ததன்றே. (25)

பார்த்துப் பணிமின் ; அடியிணை வீழ்ந்து பரவுமின்கள் ;
வேர்த்து விறுவிறுத் தன்புக்கண் ணீர்வர, விழைவுடனே
ஆர்த்துப் புகழ்மின் ; அவன்அருள் பெற்றால் ; அதன்பிறகிங்
கீர்க்கின்ற பாசம் தனைஅண்ட ஒட்டா திதுதொண்டதே. (26)

தொண்டர்கண் டண்டிமொண் டுண்டிருக் கும்சுத்த ஞானம் எனும்
தண்டைஅம் புண்டரி கம்தரு வாய் ; ரத்னத் தாழ்கிரியை
அண்டிய பால முருகனே, நின்னை அனுதினமும்
வண்டலர் பூங்குழ லாள்வள்ளி யோடு வணங்குவனே. (27)

வணங்கித் துதிக்க அறியா மனித ருடன்இணங்கிக்
குணம்கெட்ட துட்டனை ஈடேற்று வாய் ; ரத்னக் குன்றினிலே
மணம்கமழ் சோலைகள் சூழ விளங்கிய மாமயிலோய்,
நிணம்கக்கும் தேகம் நிலைஇல தென்று நினைகுவனே. (28)

நினைந்தும், புகழ்ந்தும், நடந்தும், கிடந்தும், நினைஅன்றியே
கனைந்து நினைப்பதற் கொன்றில்லை காண் ; ரத்னக் கார்மலையில்
முனைந்தவை வேலொடு நிற்கின்ற பால முருக, நினை
இனைந்திடும் போது நினைந்திடு வேன் ; அருள் ஈகுவையே. (29

ஏதேனும் ஒன்று கொடுத்தவர் பால்நன்றி எய்துகென்றே
ஓதாத நல்லோர்கள் உண்டோ ? நினதருள் ஊற்றத்திஞல்
பாதாதி கேசம் படைத்தனன் ; வாழ்வும் படைத் திருந்தேன் ;
யாதோதி உன்னைப் புகழ்வது ? சொல்லல் எளிதல்லவே. (30)

எளிதன்று மானிட ராய்ப்பிறத் தல்காண் ; இதனைஎண்ணி
அளிதுன்ற நின்அடி போற்றுவ தேகடன் ; ஆதலிஞல்
களிதுன்ற ரத்ன கிரிவந்து, பால, கருணைஉளாய்,
துளிவந்த கண்ணீர் பெருகத் துதிக்கும் துணிவருளே. (31)

துணிவுடை யார்இவர் என்று புகழ்பெற்றுத் துன்னியவர்
தணிவரும் ஆற்ற லுடைக்காலன் வந்தால் தயங்குவரே ;
அணிவுறு நின்மலர்ப் பாதத்தைப் போற்றும் அகம்இருந்தால்
நணிவரு வாஞேஅக் காலன் ? பயந்து நடுங்குவனே. (32)

நடுங்கும் ; வருந்தும் ; என் நாயகன் தன்அருள் நண்ணிலன்என்
றடங்கும் ; ஒடுங்கும் ; இவ் வாயிழை பால்அருள் ஆர்ந்துவந்து
மடங்குதல் நீக்கி அருளுக ; ரத்தின மாக்கிரியில்
கடம்கவிழ் யானை எனநின்ற வேலவ, காருண்யனே ! (33)

காருண்யம் என்பது நின்உரு வே ; அதைக் கண்டுகண்கள்
நீர்உண்டு வீழ நெடுநிலம் வீழ்நது நிதம்பணிந்தால்
சீர்உண்டு ; மித்திரர் தாம்உண்டு ; நல்வளச் செல்வம்உண்டு ;
பேர்உண்ட நல்லவர் ஆசிகள் உண்டு ; பெருமைஉண்டே. (34)

உண்டுண் டுடுடுண்டுன் டுண்டெனப் பேரி ஒலிமுழங்கத்
தண்டவத் தலைவ ருடன்சென்று சூரனைத் தாக்கிஅவன்
கொண்ட படையைக் குலைத்தவ, ரத்னக் குலவரையில்
அண்டும் பெருமான், வடிவேற் கரத்தாய், அறுமுகனே. (35)

தாய்குறை சொல்லத் தமர்குறை சொல்லத் தனிமையிஞல்
நோய்பெற்று வாடும்இந் நேரிழைக் குன்அருள் நோக்குதவாய் ;
வாய்பெற்ற தாற்பயன் நின்னை வழுத்துதல் ; வாகுயர்ந்த
சேய், ரத்ன வெற்பிற் பொலிந்து சிறந்து திகழ்குகனே. (36)

குகைஎனச் சொல்லும் தகரா லயத்தில் குடியிருப்பாய் ;
நகைமிகு வள்ளிதெய் வானையை அன்பின் நயத்திடுவாய் ;
இகலரும் ரத்ன கிரியினிற் பாலன் எனஇருப்பாய் ;
புகலரும் சீர்உடை யாய், நினைப் போற்றிப் புகழுவனே. (37)

வண்மை மிகுந்த உடலுடை யோரும் மயானத்திலே
கண்பெற ஓர்பிடி சாம்பராய் ஆவது கண்டபின்பும்
நண்புள்ள தென்றிந்தத் தேகத்தை நம்பியே நாளும்உழைத்
துண்பதை அன்றிநீ பால முருகனை ஓர்திநெஞ்சே. (38)

ஓரோர்கால் வாய்விட்டு நம்பெரு மான்என்றே ஓலம்இடும் ;
சீர்ஓர்கால் ஓவாமல் நெஞ்சில் நினைப்பாள் ; சிவன்தருசேய்
ஈர முடன்அருள் செய்குவன் கொல்லோ ? எனஅழுவாள் ;
பேருடைப் பால முருக, இப் பேதையைப் பேணுவையே. (39)

பேணும் உடம்பினைப் பெற்றத னுற்பயன் பீடுறவே
ஏண்ஒன் றிலாத வேலவ னைப்பணிந் தின்புறுதல் ;
காணும்இவ் வுண்மை அறிந்தேன் ; இரத்னக் கவின்கிரியில்
மாணுடைப் பால முருகனைப் போற்றி வணங்கினனே. (40)

வணங்கிய வில்லுடை வீரர்கள் ஆயினும், மாற்றலரைப்
பிணங்கிய போரினில் வெற்றிகொண் டாலும் பெறும் பயன்என்?
கணம்கொடும் காலன் வரின்அவர் வீரந்தான் காப்பதுவோ?
மணம்கொள் கடம்ப மலர்மாலைப் பால, வடிவேலனே. (41)

வடிவுடை மாதர் மயக்கினில் வீழ்ந்து மதிதவறிக்
கொடிய பிணியால் வருந்தும் நிலைபெறும் கோலம்உளார்,
நெடியவை வேலுடைப் பால முருகநின் நிலவடியிற்
படிய வணங்கிடின் நற்பயன் யாவும் படைப்பவரே. (42)

படைப்பவன் ஆணவம் மிக்குநின் னைக்கண்டும் பண்பிலனாய்
மிடுக்கொ டிருப்பதைப் பார்த்தவன் தன்னை வெடுக்கெனவே
அடுக்கிய குட்டுகள் அன்னோன் தலையில் அளித்தவவனே,
இடுக்கண் இலாத இரத்ன கிரியில் இருப்பவனே ! (43)

பவம்அறும் என்றுனைப் பல்லோர் நயந்து பணிந்தனரால் ;
அவமுறும் வாழ்க்கையில் வீணாளைப் போக்கும்அவலமுளேன்,
சிவம்உறும் நின்அடி சேவிக்க வைத்துத் திருவருள்செய் ;
தவர்புகழ் ரத்ன கிரிஅமர் பால, தயாபரனே. (44)

தயையிற் சிறந்தவள் தாய்என்பர் ; அத்தகு தாயைவிட
இயைபுற்ற நற்றயை நீஉடை யாய் ; அவன் ஈறுபெறின்
நயம்உற்ற தாய்பிறர் ஆர்உளர் ? நீயோ நலமுடனே
பயம்உற்றெந் நாளும் புரப்பவன் என்று பணிகுமினே. (45)

இனன்முத லாய கிரகங்க ளால்வரும் இன்பதுன்பம் ;
மனம்கொள அன்னவர்ப் போற்றுதல் நன்றெனும் வாய்மைசொல்வார்;
சினம்கொளும் வேலவ, ரத்ன கிரியினிற் சேர்பவனே,
கனம்கொள நின்னை வணங்கின்அக் கோள்செயல் காண்கிலமே (46)

காண்கிலள் யாரையும் ; ஊணும் வெறுத்தனள் ; கைவளைகள்
பூண்கிலள் ; சற்றும் துயில்கிலள் ; ரத்னப் பொருப்பவனை
ஏண்பெறக் கண்டிலன் ; என்செய்கு வேன் ? என ஏங்குகிருள்;
சேண்பெறும் சீருடை வேலவ னே, அருள் செய்குவையே. (47)

செய்யினில் நெல்விளைந் தால்தான் பயன்உண்டு ; சீருடைய
கையிற் பொருள்இருந் தாற்பயன் உண்டு ; கவின்கன்னியை
மைய லுடன்மணம் செய்தாற் பயன்உண்டு ; மாஇரத்ன
ஐய கிரிப்பால வேலனைப் போற்றின் அனைத்தும் உண்டே. (48)

உண்டிடும் போது விருந்தின ரோடே உணல்அறமால் ;
பண்டையர் தாம்தமக் கென்றுலை ஏற்ருர் ; பரிவுடனே
கொண்டநின் கோலம் பணிந்தேன் ; விருந்தெனக் கொள்ளுவையோ?
மண்டு புகழ்ரத்ன வெற்பினிற் பால, மயிலவனே. (49)

மயிலினை ஓங்கார நல்வடி வென்றுன்னி வாழ்த்துகிலேன் ;
உயர்சக்தி வேலினை ஞான உருஎன் றுணரகிலேன் ;
பயில்வள்ளி இச்சா சக்திதெய் வானை படர்செயலாய்
நயந்திலன் ; என்செய்வேன்? ரத்ன கிரியை நயந்தவனே. (50)

நயப்பும் வெறுப்பும் இரவும் பகலதும் நண்ணுகிலா
துயஓர் வழிசொல்ல வேண்டும் ; இரத்தின ஓங்கலிலே
மயல்அற நிற்கும் வடிவேல, நீப மலரணிந்தாய்,
அயர்வறச் செய்யும் குணசீல, பால, அயில்முருகே. (51)

முருகா, குமரா, இரத்தின நற்கிரி முன்புநின்ற
குருவே, குகனே, குறைவிலா நல்எழிற் கோலம்உளாய்,
மருவேறும் நீப மலர்மாலை பூண்டுயர் வானவனே,
உருஏறும் நின்அடி போற்ற இடம்இலை உள்ளத்திலே. (52)

இடம்இல்லை நெஞ்சில் ; அணுஎன் றிதனை இயம்புவரால் ;
நடைமுறை நோக்கிடின் இம்மனம் எங்கெங்கோ நாடுறுமே ;
அடைதரும் இஃதை அடக்குதற் கோர்ஆ றறைகுவையோ ?
மிடைதரு சீர்கொள் இரத்தின வெற்பினில் வேலவனே. (53)

வேல்உண்டு; துன்பில்லே ; மஞ்ஞைஉண் டின்னல் விளேவதிலே;
தாலுண்ட சீர்உண்டு ; நாள்தொறும் ஏத்தியே தாழ்ந்திடலாம் ;
கோலுண்ட மான்போல் துயர்கொண்டு நெஞ்சே, குலையுறல்நீ;
சேலுண்ட கண்வள்ளி நாதன் உளன், ரத்னச் செங்குன்றிலே. (54)

குன்றம் எலாம்திருக் கோயில்கொள் வேலன் ; குழாம்துதிக்க
நன்றுயர்ந் தேரத்ன நற்கிரிப் பால நலவடிவில்
ஒன்றினன் ; பால முருகன் அடிமைக் குயர்வளித்தான் ;
கன்றென நின்றவன் தாள்பணிந் தேத்திற் கதிதருமே. (55)

கதிஅறி யாத குருடனேப் போலவே, கண்பெறினும்
துதிஅறி யாமல் இரத்ன கிரிக்குகன் சோதிஉரு
வதைவணங் காமல் இருந்திடின் வாழ்க்கை அடைந்தபயன்
எதுவும் இலதாகி வீணுய் விடும்என்ப தெண்ணுநெஞ்சே. (56)

சேயாம் முருகன் நமைக்காக்க என்றுதன் சிந்தைகொண்டு
தேயாப் புகழுடன் ரத்ன கிரியில் திகழுகின்ருன் ;
நீயோ எவர்எவ ரோதுணே என்று நினேவுறுவாய் ;
ஆயாத நெஞ்சமே, நில்லாத திவ்வுட லாம்என்பதே. (57)

பத்துத் தலேயைப் படைத்த இராவணன், பாற்கடலில்
நத்தித் துயின்றவன் அம்பால் இறந்தனன் ; நானிலத்தில்
அத்தகை வல்லவன் பொன்றிய தை அறிந் தாலும்இன்னும்
புத்திவந் தேரத்ன வெற்போற் ருெழாவிடின் பொற்பெதுவே ? (58)

எதுநிலே ? ஏது நிலேயாதனவென்றறி வெய்திநின்ருல்
கதுமென ரத்ன கிரியினிற் பாலனேக் கண்டுதொழு
திதுகடன் எனநிற்றல் நற்பயன் ; காணுக, என்றன்நெஞ்சே,
எதுவரி னும் வாட்டம் இல்லா திருக்க இயலும் அன்றே. (59)

அன்றே உனக்கியான் ஆளாகி விட்டேன் ; அரியகுணக்
குன்றே, இரத்தின மாமலே நின்ற குமர, குகா,
இன்றெனக் கேதும் பயம்இலே காண் ; காலன் எய்துகினும்
உன்றனேப் போற்றியே ஒடவைப் பேன் ; அஃதுனதருளே. (60)

அருளேப் பெறுவ தரிதரி தென்பர் அவர்பலரே ;
தெருள்உடை யோரோ மிகஎளி தென்பர் ; திறம்அறியேன் ;
மருள்உடை யேன் ; ரத்ன வெற்பினில் வாழும் மயிலவனே,
குருளேபோல் என்னேநீ ஆண்டுகொண் டால்என்ன
குற்றம் உண்டே? (61)

குற்றம் இலாதவர் இவ்வுலக கத்தில் குறைவு ; குற்றம்
பெற்றவ ரேபலர் ; அஃதை நினைந்து பெரிதும்நையா
துற்றநற் சீலர் உறைவிடம் தேடி உயச்செய்குவாய் ;
கற்றவர் போற்றும் இரத்தின வெற்புறை காவலனே. (62)

காவல னே, சதி இட்டு நடக்கும் கலாபமுடை
மாவல னே, மெய்ஞ் ஞான வடிவாய் மலர்ந்தவனே,
பாவலர் போற்றும் இரத்தின நற்கிரிப் பால்உறைவாய்,
நாவலம் ஈந்துனை வாழ்த்தும் இயல்பினை நல்குவையே. (63)

நல்குர வாலே நலிந்து துயருறும் நன்மக்களைச்
செல்களன ஞமல் அரவணைத் தேநற் சிறப்பளிக்க
ஒல்லும் படிசெய் தருள்வாய் ; இரத்தின ஒங்கல்மிசைச்
சொல்லும் புகழொடு நின்றருள் வோய், பெரும் சோதியனே. (64)

சோதிக்க வேண்டா ; அடியேன் மிகஏழை ; சுத்தம்இலேன்;
யாதுக்கும் சற்றும் பயன்படல் இல்லேன் ; இணைந்துநின்றேன்;
வா திக்கு நான்உனக் கென்றப யங்கொடு ; மாமயிலோய்,
நீதிக்கு வல்லவர் போற்றும் இரத்ன நெடுங்குன்றனே. (65)

குன்றுத செல்வமும், சோதிலா நெஞ்சமும், கூடும்நண்பர்
பொன்றுத நட்பும் பொலிவும்நின் பாதத்தைப் போற்றுவதும்,
என்றேனும் எக்காலும் நின்னை மறவா இயல்பும்அருள்;
நன்று ணவர்புகழ் ரத்ன கிரியை நயந்தவனே. (66)

தவசியாய்ப் போகுதல் வேண்டும்என் றில்லை ; தனியோகமும்
அவசியம் இல்லை ; இரத்தின நற்கிரி ஆளும்அவன்
நவமலர் போல்அடி தம்மை வணங்கும் நாடிஎன்றும்
அவம்இலா தேபோது போக்கிடின் அஃதே அரும்தவமே. (67)

தவத்தாற் சிறந்த திருஞான சம்பந்தர் தாம்முருகன்
அவதாரம் என்பர் ; அவர்பெற்ற பேற்றினை ஆய்ந்துகொண்டு
சிவநாத னைஅவன் சேயினைப் போற்றிடும் சிந்தையிலேன் ;
புவனேசை சேயனே, ரத்னப் பொருப்பினிற் போந்தவனே. (68)

போந்தை நெடுமரம் சற்றும் நிழல்இன்றிப் போந்ததுபோல்
ஏய்ந்த உதவியை யார்க்கும் செயாத இயல்புடையேன்,
வாய்ந்தநின் சீறடி வாழ்த்தும் வகையையும் மற்றறியேன் ;
ஓய்ந்தனன் ; நீ அருள் வாய் ; ரத்ன ஓங்கலில் உள்ளவனே. (69)

உள்ளத்தைச் சொன்னல் உடம்பெரிச் சல்வரும் ; உற்றநல்லோர்
மெள்ளத்தம் நற்றயை யாலே அறிவு விளம்பினரேல்
கொள்ளத் திறம்இன்றிக் காதிலான் போலக் குமைந்திருப்பேன் ;
எள்ளத் தனைநின் அருள்தா ; இரத்ன எழில்வெற்பனே. (70)

வெற்பெலாம் நின்றருள் செய்குவை ; வெற்பினர் வேலனைக்கொண்
டற்புட னேவெறி ஆடஅங் கேவந் தருள்புரிவாய் ;
சிற்பர னே, ரத்ன வெற்புடைப் பால, திகைக்கும்என்றன்
அற்ப மதியினைப் போக்கிநல் ஞானம் அருளுதியே. (71)

அருள்என்ப தன்பீன் குழவிஎன் றேஉரைத் தார்பெரியார்
திருவள் ளுவர் ; எனக் கன்பும் இலை ; அருள் சேருமதோ ?
கருவுள் ளளவும் சுகம திலாத கதிபோக்குவாய் ;
குருவென் புகழ்கொள் இரத்ன கிரிஉறை கோழியனே. (72)

கோழிக் கொடியன் அடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருதும் மதியிலி நான் ; இந்த மாசகற்றி
ஆழநின் தாளைத் தியானிக்க நல்ல அருள்புரிவாய் ;
சூழும் புகழ்ரத்ன மாமலை மேவிய தூயவனே. (73)

தூயவர் நேயம் இருந்தால் மெலமெலத் தூய்மைவரும் ;
ஏயபல் தீங்கெல்லாம் நீங்கும் எனவே இயம்புவரால் ;
ஆயஅத் தூயவ ரோடே இணங்க அருள்தருவாய் ;
மாயன் மருகா, இரத்தின நற்கிரி வாழ்பவனே. (74)

கிரிஎன ஓங்கித் துளக்கம்இல் லாது கிளர்பவர்கள்
நரிஎன ஒல்கி நடுங்குதல் இந்தமா ஞாலஇயல் ;
உரியநின் றன்னை வணங்கின் அமைதி உளத்தமையும் ;
அரியஇப் பேற்றை அருள்வாய் இரத்ன அடல்வெற்பனே. (75)

பன்னும் பனுவல் எனநெஞ்சு பாய்ந்து படர்தரும் ; இஃ
துன்னும் பொருள்ஒன் றல; பல கோடி உறும் ; இதனை
நின்நல் அடியிணை சிந்திக்க நல்லருள் நீபுரிவாய் ;
மின்னும் சுடர்வேல் இரத்ன கிரிஉரை மேலவனே. (76)

மேலவன், கீழவன், நாப்பண்உள் ளான், எங்கும் மேயபிரான் ;
காலனைக் காலால் உதைத்தவன் சேய் ; எனைக் காத்திடுவான் ;
சீலம்ஆர்ந் தோர்போற்றும் ரத்ன கிரியில் திகழுகின்றான்,
பால முருகன் எனும்பெயர் சொல்லிப் பரவிடவே. (77)

பரவிப் பணிந்து, பலபெரி யோர்பாடல் பாடிநின்று
விரவிய தொண்ட ருடன்பயின் றன்னவர் மேன்மையினைக்
கரவறி யாத உளத்தினைக் கண்டவர் காலில்விழுந்
துரம்பெற வேஅருள் ; ரத்ன கிரிஉறை உத்தமனே. (78)

உத்தமன், அத்தன், உடையான் அடியே உளம்நினைந்து
மத்த மனத்தொடு மால்இவன் என்ன வகுத்திடுவாய் ;
சத்தம் மிகுத்த புகழ்ரத்ன வெற்புறை சற்குணனே,
பத்தன் எனும்படி நின்னை வணங்கருள் பாலிப்பையே. (79)

பால்என் பதுமொழி ; பஞ்சென் பதுகால் ; பதுமமலர்க்
கோலம் முகம்என் றரிவையர் காமத்தைக் கொண்டுநின்றேன் ;
சீலம் பெறுவோர் புகழ்ரத்ன வெற்புறை தேவ, நினை
ஏலும் படிபுகழ்ந் தேத்துதற் கோர்சொல் இயம்புவையே. (80)

இயம்பல ஓசை முழங்கும்நின் கோயி லினை அணுகி
நயம்பெற நின்னை வணங்கி உயும்வகை நல்கிடுவாய் ;
பயம்இலார் போற்றும் இரத்தின வெற்புறை பண்ணவனே,
சயம்பெறும் வேலவ, ஞானத் திருஉருச் சார்பவனே. (81)

சார்ந்துநின் பாதம் பணிவதல் லாமல் தகைஒன்றிலை ;
ஆர்ந்தநின் தொண்டர் அடிபணிந் தவ்வியல் பாரஅருள் ;
தேர்ந்த அறிவினர் போற்றும் இரத்னத் திருமலையாய் ;
ஓர்ந்திந்த நல்நிலை யான்பெறும் ஆற்றை உரைத்தருளே. (82)

உரைத்துப்பொன் மாற்றை உணர்பவர் வல்லவர் ; உன்புகழை
உரைத்துப் பணிந்திடின் எற்கொரு மாற்றிங் குயர்ந்திடுமே ;
கரைத்தநற் சந்தனம் ஆடிக் களிப்புறும் காவலனே,
விரைக்கடம் பைஅணி தோளினுய், ரத்தின வெற்பவனே. (83)

பவன்எம் பிரான், விண் ணவர்பணி வோன், கங்கை பாய் சடையான்,
சிவன்தரு பால, இரத்தின வெற்புறை தேவ, அருள் ;
பவன்எம் பிரான்உனைப் போற்றிப் பணியப் பணித்தருள்வாய் ;
இவன்எவன் என்று பராமுக மாய்விடின் என்செய்வனே ? (84)

செய்யவன் நன்மேனி ; செய்யவேற் கையன் ; சிறுமிவள்ளித்
தையலைக் கண்டன்புளம் கொண்டு தங்கன்பினுல்
நையல்இல் லாத களவுப் புணர்ச்சியை நாடியவன்,
கொய்மலர் கொண்டடி யார்துதி ரத்தினக் குன்றவனே. (85)

குன்ருத அன்பும், கொடுமைசெய் யாத குணமும், மயல்
ஒன்ருத உள்ளமும், உன்பால் அமையும் உயர்பக்தியும்
நின்ரே நிலவ நினதருள் தந்து நிலைபெறச் செய் ;
பொன்ருப் புகழ்ரத்ன வெற்புறை நின்மல, பூரணனே. (86)

பூரணம் ஆன பொருள்நீ எனஅறி புத்திதந்தே
ஏரண வும்பண்பு தந்தருள் ; நீஅன்றி ஏதுகதி ?
காரண னே, கரு ணுகர னே, ரத்னக் கல்லவனே,
ஆரணம் எல்லாம் புகழும் பெருமை அடைந்தவனே. (87)

அடைந்தவெம் சூரன் தனக்கும் அருள்தந் தவனைஎழில்
மிடைந்துயர் ஊர்தியாய், ஓங்கும் கொடியாய் விளங்க வைத்தாய் ;
சடைந்திடும் நாயேனை உத்தமன் ஆக்கத் தயைபுரிவாய் ;
உடைந்திடும் உள்ளம் இலார்போற்றும் ரத்தின ஓங்கலனே. (88)

ஓங்கும் புகழினுல் என்வரும் ? நின்னை உணர்வதின்றித்
தாங்கும் பதவியால் ஓர்பயன் உண்டோ ? தலைசிறந்த
பாங்குடை யாய், ரத்ன வெற்புடைத் தேவ, பரம்பரனே,
நீங்ககில் லாப்புகழ் கொண்டவ னே, சுத்த நின்மலனே. (89)

மலம்மூன்றிற் சிக்கி அறிவிழந் தெள்ளும் மதிஉடையேன்
தலம்ஊன்று ரத்ன கிரியுறை பாலக, சற்குணனே,
நலம்ஊன்று பண்புகொண் டுன்னைப் பணியும் நயம்தருவாய் ;
கிலம்இல் லவர்புகழ் வேலவ, மேலவ, கேண்மையனே. (90)

கேட்டாரும் தேறகில் லாதவன் ; கேளார் கிறிஅகற்ருன் ;
வேட்டார்க்கு நல்லவன் ; வேண்டுவ ஈந்து விரும்பிஅருள்
தேட்டை அளிப்பவன் ; ரத்ன கிரிஉறை தேவன் ; இந்த
ஒட்டைக் குடமாம் உடம்பிற் புகுந்தெனை உய்விப்பனே. (91)

உய்யும்வண் ணத்தை அறிகிலேன் ; தொண்டர் உறையும்இடம்
எய்தப் பணிந்து நின்றனைப் போற்றும் இயல்கற்றிலேன் ;
பெய்யும் மழையாற் பொலிவும் இரத்தினப் பேர்க்கிரியாய்,
வையும் படிஎனை வையாமல் நின்னை வழுத்தவையே. (92)

வழுத்தி வணங்கி அருட்பெயலால்நனை மாண்புடையோர்,
பழுத்த மனத்தினர் ஆகிநின் நல்அருள் பற்றிநின்ருர் ;
அழுக்கு மனத்தினன் பாசச் சுழலில் அழுந்துகின்றேன் ;
இழுக்கிலார் போற்றும் இரத்தின வெற்பில் இறையவனே. (93)

இறையவ னே, அரு ளின்மலை யே, எழில் ஏற்றம்உளாய்,
மறையவ னே, ரத்ன வெற்புறை பால, மணம்கமழும்
நிறைகடப் பந்தார் அணிபவ னே, என்றும் நின்மலனே,
உறைதயி ரைக்கடை மத்தென நின்றேன் ; உயச்செய்வையே. (94)

செய்வதொன் றின்ன தெனஅறி யேன் ; நின் திருவடியை
உய்வதை எண்ணி வணங்கிலன் ; தூர்த்தர் உறவுகொண்டேன் ;
பெய்வது போல அருள்தரு வாயோ ? பிறப்பிலனே,
செய்நலம் உள்ள இரத்தின வெற்புறை சேவகனே. (95)

சேவக னே, முப் புரம்எரித் தான்தரு சேயவனே,
ஏவல் இடம்பொருள் ஒன்றும் இலாதஇவ் வேழையின்பால்
நீவல் அருள்செயின் மாசொன் றுனக்கு நிலவுறுமோ ?
பாவம்எல் லாம்தீர்க்கும் ரத்ன கிரியுறை பண்ணவனே. (96)

பண்ணவ னே, ஆனவ னே, பரப் பானவனே,
விண்ணவர் ஏத்தித் தமது பதவியை வேட்டுநிற்கும்
கண்ணவ னே, ரத்ன வெற்புறை பால, கணங்கள்புகழ்
எண்ணவ னே, எழுத் தானவ னே, எம் இறையவனே. (97)

இறைஅள வேனும் அறிவிலாப் பாவி யினுக்கருளின்
நிறைதரும் நின்அருட் காசு வருமோ ? நினைஅன்றிநான்
குறைஅற யாரிடம் செல்குவன் ? ரத்தினக் கோவெற்பினுய்,
நறைநிறை யும்கடப் பந்தாரி னுய், எங்கள் நாயகனே. (98)

நாய்அனை யேன்எச்சில் நச்சிஉண் பேன், இனி நன்மை உண்டோ ?
தாய்அனை யாய் அருட் பால முருகா, தனிஇரத்ன
மாய கிரியில் எழுந்தருள் வாய்என் அலல்களைவாய் ;
போய பிழைகள் பொறுத்தருள் வாய் ; எங்கள் புங்கவனே. (99)

புங்கவன், ஈசன், உனக்கருள் செய்வனே? போக்கிலைகாண் ;
இங்கிரு நீசக் குணத்துடன் என்றெனை ஏசுவையோ?
எங்கினிப் போகுவன் ? எவ்வாறு நன்னலம் எய்துவன்யான்?
பொங்கிய நற்புகழ் ரத்ன கிரியுறை போதகனே. (100)

போதனை செய்து, மிகப்பாவி என்னைப் புகல்பெற்றுநற்
சாதனை செய்யப் பழக்குவார்க் கண்டிலன் ; தாலம்இதில்
வேதனை யைக்கொண்டு வீணே அழிதல் விதிகொல்? ரத்ன
மாதலம் மேவிய பால முருக, நன் மாதவனே. (101)

மாதவம் செய்ய வழிஅறி யேன் ; மையல் மண்டிஇன்பம்
மாதர்கள் ஈவார் எனஎண்ணி வாழ்ந்திடும் வாழ்க்கைவிட்டுப்
பூதலம் போற்றும் இரத்தின வெற்புறை புண்ணியனே,
நீத முடன்நினை வாழ்த்தி வணங்க நினைத்தருளே. (102)

நினைத்தொறும் காண்தொறும் பேசும் தொறும்இன்பம் நேரும்எனும்
வினைத்தொகை போக்கிய மாணிக்க வாசகர் மெய்யுரையை
எனைத்துணை யேனும் அறிந்திலன்; ஏழையேன் ; என் செய்குவேன் ?
அனைத்துணை யாம்ரத்ன வெற்புறை பால, அருளுவையே. (103)

அருளின் திறம்அறி யேன் ; அதை எய்திடும் ஆறறியேன் ;
தெருளும் திறம்இலேன் ; நின்னுடை ரத்னத் திருமலையில்
உருளும் ஒருகல்லாய் ஆவதற் கேனும் உனதருள்செய் ;
இருளும் மனம்இலார் போற்றிய தேவ, இறையவனே. (104)

திண்ணிதின் நற்குகன் திருவடி வீழ்ந்து எழுந்து பணிந்
தண்ணிய நலம்பெறும் அன்பர்க்கு நல்லருள் அளித்திடுவான் ;
பண்ணிய பாவங்கள் போக்கிடு வான் ; பலர் பால்அன்பினை
எண்ணுறச் செய்குவன் ரத்ன கிரியுறை இறையவனே. (105)

இறையவ வாழி ! நின்அருள் வாழி ! இனிதுபணிந்
துறைதொண்டர் வாழி ! நல் அறம் வாழி ! உலகில்நல்லோர்
நிறைவுற வாழி ! இரத்தின வெற்புறை நின்அருளும்
குறைவற வாழி ! கொழுந்திரு வோடு குறைவறவே. (106)

## பயன்

இரத்தின வெற்புறை எம்மான் முருகன்
விரித்தபுகழ் சற்றே விளம்பித் - தரித்திட்ட
இந்தநூல் ஓதுவார் இன்புறுக ; எந்நாளும்
பந்தம்அற நிற்க பரிந்து.

# அரும் பதவுரை

1. திருமகள் - இலக்குமியை, மார்பன் - தன்னுடைய திருமார்பில் வைத்த திருமாலினுடைய. மருகன் - தங்கையாகிய உமா தேவியின் திருமகன். அழகன் - என்றும் மாறாத அழகை உடையவன்; ''என்றும் அழகியாய்'' என்று பிறர் கூறுவதை உணர்க. திறல் உடையான் - பகைவர்களை அழிக்கும் ஆற்றலை உடையவன். அருள் மிகுகின்ற - திருவருள் மிகுதியாக இருக்கின்ற; இது பெருமானுக்கு அடை. இரத்தின நற்கிரி - நல்ல இரத்தினகிரியில். ஆர் - எழுந்தருளியுள்ள. பெருமான் - பாலமுருகன். மருவும் - தன்னை அணையும். குறமகள் - வள்ளியினுடைய. நோக்கிற்கு - கடைக்கண் பார்வையைப் பெறுவதற்கு. அலந்து - மனம் கலங்கி. வருந்தியவன் - வருத்தத்தை அடைந்தவன். குரு எனும் - அகத்திய முனிவர், சிவபெருமான், அருணகிரிநாதர் முதலியவர்களுக்கு உபதேசம் செய்த குரு என்று சொல்லும். பால முருகன் - இரத்தினகிரியில் எழுந்தருளியுள்ள பாலமுருகனுடைய. திருவடி - அழகிய பாதங்கள். கூர்துணை - அடியேனுக்கு மிக்க பாதுகாப்பாக உள்ளவை.

2. துணையும் - அடியேனுக்குத் துணையாக இருப்பவனும். தொழும் தெய்வமும் - அடியேன் வணங்கும் கடவுளும். பெற்ற தாயுடன் - அடியேனைப் பெற்றெடுத்த தாயினுடனே. சுற்றமும் ஆய் - உறவினர்களும் ஆகி. இணையும் - பொருந்தி உள்ள. குமரன் - குமாரக் கடவுள். இரத்தின நற் கிரி - நல்ல இரத்தின கிரியில். ஏய்ந்த - எழுந்தருளியுள்ள. குகன் - தகராலயம் என்னும் குகையில் இருப்பவன். பணை எனும் - மூங்கில் என்று சொல்லும்படி அமைந்திருக்கும். தோள் உடை - தோள்களை உடைய. வள்ளி - வள்ளியெம் பெருமாட்டி. அணைந்த - தழுவிய. பரம்பரனை - மேலானஉள்ளவனை. அணைந்து - அவனுடைய சன்னதியை அடைந்து. வணங்குவார் - பணிகின்ற மனிதர்கள். எந்நாளும் - எந்தக்காலத்திலும். அச்சம் - எதனாலும் உண்டாகும் பயம். அகன்றவர் - நீங்கியர்.

3. ஏதும் - எந்தப் பொருளும். இணைஇலா - ஒப்பு இல்லாத. வீரம் - பகைவர்களை அழிக்கும் வீரத்தை. உடையவன் - பெற்றவன். எண்ணமதில் - தம்முடைய எண்ணத்தில்; அது: பகுதிப் பொருள் விகுதி. கோது - குற்றம். சிறிதும் - சிறிதளவேனும். இலாதவர் - இல்லாத பெரியவர்கள். போற்ற - வாழ்த்தி வணங்க. குதுகலிப்பான் - அதனால் மகிழ்ச்சியை அடைவான். வாது இல - தருக்கம் சிறிதும் இல்லாத; இந்த மலை சிறந்ததோ, அல்லவோ என்று தருக்கம் செய்வதைச் சொன்னபடி. இரத்தின மா மலைப்பால் - பெருமையை உடைய இரத்தின கிரியில். என்றும் -

எக்காலத்திலும். வாழ் - எழுந்தருளியிருக்கும். பெருமான் - தலைவனாகிய பால முருகன். சாது ஆம் - துறவி ஆகிய. பாலமுருகன் அடிமையுள் - பால முருகன் அடிமை என்னும் துறவியின் மனத்திற்குள். தங்குவன் - எழுந்தருளி இருப்பான்.

4. தங்கம் - பொன் என்னும் உலோகம். பெரிது என்று - எல்லாவற்றிலும் சிறந்தத என்று. வீணே - வீணாக. முயன்று - அதைப் பெறுவதற்காக முயற்சி செய்து. தவிப்பவர்கள் - அதைப் பெறாமல் தவிப்பை அடைபவர்கள். மங்குவர் - இறந்து போவார்கள். பால முருகன் மருவிய - பால முருகன் எழுந்தருளிய. மாமலை ஆம் - பெருமையை உடைய மலை ஆகிய. துங்கம் - பரிசுத்தம் உடைய. இரத்தின நற் கிரி - நல்ல இரத்தின கிரியில். மேவிய - எழுந்தருளியுள்ள. சுந்தரனை - என்றும் அழகிய பால முருகனை; ''என்றும் இனையாய அழகியாய'' என்று பிறர் கூறுவது காண்க. மங்களம் - மங்கலம் உடைய. பால முருகனை - இரத்தின கிரியில் எழுந்தருளிய பால முருகனை. வாழ்த்தின் - வாழ்த்தி வணங்கினால். வளம் - செல்வம் முதலிய வளப்பங்கள். வரும் - உண்டாகும், ஏ : கட்டளைக் கலித்துறையின் ஈற்றில் ஏகாரம் வருவது மரபு.

5. வருவதும் - இந்தப் பூமியில் பிறப்பதும். போவதும் - இறந்து போவதும். ஆய - ஆகிய. பிறப்பு - பிறவியிலும், மரணத்தினில் - சாவினிலும். மருவுறு - அடைகின்ற. துன்பம் - துன்பங்களை. அகற்ற - போக்க. என்றால் - என்று விரும்பினால். ஓர் வழி - அதற்குத் தக்க ஒரு வழியை. சொல்லுவன் - கூறுவேன். திருஉறும் - அழகு பொருந்திய. சீர்கொள் - சிறப்பை உடைய. இரத்தின நற்கிரி - நல்ல இரத்தின கிரியில். தேவனை - எழுந்தருளியுள்ள பால முருகனை, ஏ : ஆசை நிலை. குரு என - குரு என்று எண்ணி. போற்றி - வாழ்த்தி. வணங்கிடின் - பணிந்தால். இன்பம் - பல வகையான இன்பங்கள். குலவுறும் - நம்மை வந்து அடையும்.

6. குலவுலர் - பல இடங்களுக்குச் செல்லுவார்கள். மாதர்கள் தம்மொடு - பெண்களோடு. கூடி - புணர்ந்து. குதுகலிப்பர் - மகிழ்ச்சியை அடைவார்கள். இரத்தின மா மலையில் - பெருமையை உடைய இரத்தினகிரியில். நிலைபெறும் - நிலையாக எழுந்தருளியிருக்கும். பால முருகனை - பால முருகன் என்னும் திரு நாமம் உடைய வேலவனை. ஏத்திடின் - துதித்து வணங்கினால். இன்பு நீடும் - இன்பங்கள் நெடுங்காலத்துக்கு நம்மிடம் இருக்கும்.

7. இன்பம் - இன்பங்கள். இனிமேலும் - இதற்கு மேலும். வேறு ஒன்று - பிறிது ஒன்று. உண்டு - இருக்கிறது. என்ன - என்று, ஏ : அசை நிலை. எண்ணல் இன்றி - எண்ணுவது இல்லாமல். மன் -

நிலைபெற்ற. சீர்கொள் - சிறப்பைப் பெற்ற. இரத்தின நற்கிரி - நல்ல இரத்தினகிரியில். வாழ் - எழுந்தருளியுள்ள. முருகன் - பாலமுருகன். அன்பிற் சிறந்தவன் - பத்தியில் சிறந்தவனாகிய. பாலமுருகன் அடிமை - பால முருகன் அடிமை என்னும் பெயரை உடைய. தொழும் - தொழுது வணங்கும். பொன் பெற்ற - பொலிவை அடைந்த. கீர்த்தி - புகழை உடைய. வடிவேல் - வடிவேலை உடைய. குமரனை - பால முருகனை. போற்று - வாழ்த்தி வணங்குவாயாக. நெஞ்சே - என்னுடைய மனமே.

8. நெஞ்சே - என்னுடைய மனமே. உனக்கு - நினக்கு. ஒன்று - ஒரு கருத்தை. சொல்லுவன் - சொல்லுவேன். கேள் - நீ அதைக் கேட்பாயாக. இந்த நீள் நிலத்தில் - இந்த விரிந்த பூமண்டலத்தில். எஞ்சாத - என்றும் குறையாத. இன்பம் உற - இன்பத்தை அடைய. வேண்டின் - நீ விரும்பினால். ரத்தின ஏர் மலையில் - அழகை உடைய இரத்தின கிரியில். துஞ்சாத - துயில் கொள்ளாத. தேவர் - தேவர்கள்; தேவர்கள் துயிலுவது இல்லை. தொழுகின்ற - வணங்குகின்ற. வேலன் - வேலாயுதத்தை உடைய பாலமுருகனுடைய. துணை அடிகள் - இரண்டு திருவடிகளை. நம் சார்பு என்று - நமக்குப் பற்றுக் கேடாக உள்ளது என்று. எண்ணினால் - எண்ணியிருந்தால். வாராத - இதுவரையிலும் வராத. இன்பநலம் - நல்ல இன்பம். வரும் - உண்டாகும்.

9. வருவார் பலர் - பலர் பால முருகன் சந்நிதிக்கு வருவார்கள். வந்து - வந்து வணங்கி தம் குறை - தமக்கு நிறைவேற வேண்டிய காரியங்கள். தீர்வர் - நிறைவேறப் பெறுவார்கள். மகிழ்ச்சியுடன் - களிப்புடனே. மரு ஆர் - மணமாலை சூட்டும். திருமணம் - விவாகம். செய்யப் பெறுகுவர் - செய்யும்படியான நிலையை அடைவார்கள். மாமுருகன் - பெருமையை உடைய பால முருகன் எழுந்தருளியுள்ள. திரு - பெருமை. வீறுகின்ற - மிகுதியாக உள்ள. இரத்தின நற்கிரி - நல்ல இரத்தின கிரியில் எழுந்தருளியுள்ள. சேய் - பால முருகனுடைய. அடிகள் - திருவடிகளை. வெரு அற - எதனாலும் உண்டாகும் அச்சம் அறும்படி. போற்றி - வாழ்த்தி. தொழும் அவர் - வணங்கும் அந்த அன்பர்களுடைய. பேறு - பெறும்பாக்கியம். விளம்புமதே - சொல்லி முடிவதோ?

10. விளம்புகைக்கு - சொல்லுவதற்கு. எட்டாத - எட்ட முடியாத. வீரம் - வீரத்தை. உடையவன் - பெற்றவன். வேல் முருகன் - வேலாயுதத்தைத் தன் திருக்கரத்தில் ஏந்திய பால முருகன். உளம் புக - நம்முடைய உள்ளத்தில் புகுந்து இருக்க. எண்ணிடின் - நினைத்தால். எல்லாம் - வேண்டிய வரங்களை எல்லாம். உதவும் - தந்தருளும். உயர் அருளான் - உயர்ந்த கருணையை உடைய

பாலமுருகன். களம்பெறும் - விசாலமான இடத்தை உடைய. ரத்தின நற்கிரி - நல்ல இரத்தினகிரியில். மேவிய - எழுந்தருளியுள்ள. கார்மயிலோன் - மேகத்தைக் கண்டு களிக்கும் மயில் வாகனத்தை உடைய பாலமுருகனுடைய. தளம்பெறும் - தாமரை இதழைப் போன்றுள்ள. சேவடி - சிவப்பு நிறத்தை உடைய திருவடிகளை. போற்றி - வணங்கி. துதித்தால் - துதிகளைச் சொன்னால். அதுவே தவம் - அந்தச் செயலே தவமாகும்.

11. தவம் செய - தவத்தைப் புரிவதற்கு. என்று - என. எண்ணி - நினைந்து. கானகம் தேடி - காடுகளைத் தேடி. தழையை உண்டு - உதிர்ந்த தழைகளைத் தின்று. பவமதை - பிறப்பை ; பாவத்தை எனலும் ஆம். அது : பகுதிப் பொருள் விகுதி. நீக்கல் - போக்கிவிடுதல். மிக எளிதோ - மிகவும் சுலபமான காரியமோ ? அருட்பா வலவன் - முருகனுடைய அருளைப் பெற்ற கவிஞனாகிய. சிவம் ஆர் - மங்கலம் நிறைந்த. அருணகிரிநாதன் - திருப்புகழ் முதலியவற்றைப் பாடியருளிய அருணகிரிநாதர். போற்றிய - வணங்கிய. சேய் - பால முருகனுடைய. அடியை - திருவடிகளை. குவலயம் - உலகத்தில் வாழும் மக்கள். போற்றும் - வாழ்த்தி வணங்கும். இரத்தின நற்கிரி - நல்ல இரத்தின கிரியை. கூடுக - அடைந்து பால முருகனை வணங்குங்கள்.

12. வேதனை - பிரம தேவனை. குட்டி - தன்னை மதியாமல் இருந்ததனால் அவனுடைய தலையில் குட்டி, சிறை இட்ட - சிறையில் தள்ளிய. வேலன் - முருகக் கடவுள். விரும்புபவர் - விரும்புகின்ற மக்கள். வேதனை - துன்பங்களை. நீக்கி - போகச் செய்து. பிறப்பு அறுப்பான் - இனிமேல் பிறத்தலைப் போக்கும் பொருட்டு. ரத்னவிற் கிரியில் - ஒளியை உடைய இரத்தின கிரியில் எழுந்தருளியுள்ள. நாதனை - பாலமுருகனை. போற்றி - வாழ்த்தி. வணங்குமின் - பணியுங்கள். என்றும் - எக்காலத்திலும். நலம் - பலவகை நன்மைகளை. பெறலாம் - அடையலாம். சீதள வாரி சபாதனை - குளிர்ந்த தாமரை மலர்களைப் போன்ற திருவடிகளை உடைய பாலமுருகனை. போற்றி - வாழ்த்தி வணங்கி. திகழுமின் - விளங்குங்கள்.

13. மின்இடை - மின்னலைப் போன்ற சிறிய இடுப்பை உடைய. மாதர் - பெண்களுடைய. மயக்கினில் - காம மயக்கத்தில். வீழ்ந்து - அழுந்தி. விழற்கு - விழல் என்னும் கொடிக்கு ; அது ஒன்றுக்கும் பயன்படாத செடி. இறைத்த - பாய்ச்சிய. நல் நிற நீர் என்ன - நல்ல நிறத்தை உடைய தண்ணீரைப் போல. வாணாளை - நாம் வாழ்ந்திருக்கும் காலத்தை. வீண் ஆக்கி - வீணே போகும்படி செய்து. நாசம் உற - நாசங்கள் நம்மை வந்து அடையும்படி.

துன்னிடின் - வாழ்ந்தால். என் பயன் - என்ன பிரயோசனம்? ரத்னகிரி - இரத்தின கிரி என்னும் தலத்தில். உறை - எழுந்தருளியுள்ள. துங்கவன் ஆம் - பரிசுத்தமானவனாகிய. மன்னவன் - பாலமுருகனுடைய. பூந்தாள் - தாமரை மலரைப்போன்ற திருவடிகளை உடைய. சரவணன் - சரவணப் பொய்கையில் தவழ்ந்தவனாகிய முருகனுடைய. பாதம் - திருவடிகளை. வணங்குமின் - பணியுங்கள்.

14. சரவணப்பொய்கையில் - தருப்பைப்புல் வளர்ந்த சரவணப் பொய்கையில். சரம் - தருப்பை. தோன்றிய - வளர்ந்த. ஆறு பேர் - ஆறு கிருத்திகை மாதர்கள், தாம் ; அசை நிலை. சுரந்து - தம் கொங்கைகளிலிருந்து சுரக்கச் செய்து. மருவிய - உண்டாகிய. பாலினை - முலைப்பாலை. உண்ட - குடித்த. பிரான் - கடவுளாகிய முருகன். ரத்ன மாமலையில் - பெருமையை உடைய இரத்தினகிரியில். திரு உரு - அழகிய வடிவத்தை உடைய. பால முருகன் அடிமைக்கு - பால முருகன் அடிமை என்ற பெயரை உடைய துறவிக்கு. தேசு பெற - ஒளி உண்டாகும்படி. தேசு : தேஜஸ் என்ற வட சொல்லின் திரிபு. அருளிய - கருணை பாலித்த. நாதன் - பால முருகனுடைய. அருள் உறின் - திருவருளைப் பெற்றால், வாராதவை - கிடைக்காத நல்ல பயன்கள். உளவோ - இருக்கின்றனவோ ? இல்லை என்றபடி.

15. உளத்தும் நினைமின்கள் - உங்களுடைய மனத்திலும் தியானம் செய்யுங்கள். வாயால் புகழை உரைத்திடு மின் - உங்களுடைய வாயினால் பாலமுருகனுடைய புகழைச் சொல்லுங்கள். திளைக்கும் - இன்பத்தை அடையும். இரத்தின நற்கிரி - நல்ல இரத்தினகிரியில். வேலவன் - எழுந்தருளியுள்ள பாலமுருகனுடைய. திருவடியில் - அழகிய சரணாரவிந்தங்களில். இளைப்புற - அடிக்கடி விழுந்த வணங்குவதனால் களைப்பு உண்டாகும்படி. வீழந்து. சாஷ்டாங்கமாக வீழ்ந்து. பணிமின்கள் - வணங்குங்கள். எந்த இனலும் - எந்த விதமான துன்பங்களும் ; இனல் : இடைக்குறை. அறும் - போய்விடும். களைப்பு இலா - களைத்தல் இல்லாத. நல் முயற்சிக்கண் - நாம் செய்யும் நல்ல முயற்சிகளில். பயன் உறும் - அவற்றுக்குரிய பிரயோசனம் கிடைக்கும். காமுற - நாம் விரும்பியபடி.

16. காமர்கள் ஆயிரம் பேர் எனினும் - ஆயிரம் மன்மதர்கள் என்றாலும். கவின் - அவர்களுடைய அழகு. காலில் - பாலமுருகனுடைய திருவடிகளில். உள ஆம் - இருக்கிறதாகிய. அந்தத் தூசினுக்கு - அந்தப் பொடிக்கு. ஒவ்வார் - ஒப்பாக மாட்டார்கள் ; "ஆயிரம் கோடி காமர் அழகெலாம் திரண்டொன் றாகி, மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணம் தன்னில், மேய இவ்வெழிலுக் காற்றா தென்றிடின்

இனைய செவ்வேள், மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்கற் பாலார்'' என்ற கந்த புராணச் செய்யுளை அடி யொற்றியது இது. எழில் - இந்தப் பால முருகனுடைய அழகு. சாற்றுமதோ - சொல்லுவதற்கு அடங்குமோ? வாம மருங்கில் - சிவபெருமானுடைய - இடப் பாகத்தில் உள்ள. உமை - பார்வதி. மகிழ்ந்து - மகிழ்ச்சி பெற்று. ஏ : அசை நிலை. பால் - தன்னுடைய முலைப்பாலை. வழங்க - ஊட்ட. இன்பம் - அதனால் இன்பத்தை. ஏமம் உற - க்ஷேமம் உண்டாக. பெற்ற - அடைந்த. ரத்ன கிரியனை - இரத்தினகிரியில் எழுந்தருளியிருக்கும் பால முருகனை, ஏத்து - துதித்து வணங்குவாயாக, நெஞ்சே - என்னுடைய மனமே.

17. சேய - சிவப்பான நிறத்தை உடைய திருமேனியை உடையவானகிய குகன் - தகராலயமாகிய குகையில் எழுந்தருளியிருப்பவன். கார்த்திகை மாதர் - கார்த்திகைப் பெண்களாகிய ஆறுபேர். தரு பால் - தந்த முலைப் பால். தெவிட்டியதால் - தெவிட்டிப் போனமையால். ஆய் - தன்னுடைய தாயாகிய பார்வதி தேவி. தரு - கொடுத்த. பாலை - முலைப்பாலை. குடித்தான் - பருகினான். இரத்ன அரும் கிரியில் - அருமையான இரத்தினகிரியில், வேய்தரு - மூங்கிலைப் போன்ற, தோளினை - தோள்களை உடைய வள்ளி நாதன் - வள்ளி நாயகியின் கணவனாகிய பால முருகன் . விளங்குகிறான் - எழுந்தருளி யிருக்கிறான். பாய்தரும் - பாய்கின்ற. அன்புடன் - பக்தியோடு. அன்னான் - அந்த பால முருகனுடைய. திருத்தாள் - திருவடியினை, பணிகுவம் - வணங்குவோம்.

18. பணி அணி ஈசன் - பாம்பை ஆபரணமாகப் பூண்ட சிவபெருமான். பிரணவத்தின் பொருள் - பிரணவ மந்திரமாகிய ஓங்காரத்தின் அர்த்தத்தை. பண்புடன் - முறைப்படி. ஏ : அசைநிலை. அணிபெற - அழகு உண்டாக. ஓதுக என்று - சொல்லுவாயாக என்று ; ஓதுகென்று ; தொகுத்தல் விகாரம் ஏ : அசைநிலை. சொல - சொல்ல. அங்ஙன் - அப்படியே. அருளியவன் - ஓதிய பால முருகன். திணிபெறு தோளன் - உறுதியைப் பெற்ற பன்னிரண்டு தோள்களை உடையவன். இரத்தின நற்கிரி - நல்ல இரத்தின கிரியில். சேர் - எழுந்தருளி யிருக்கும். முருகன் - பால முருகன். மணி - கிங்கிணி மாலையை. அணி - அணிந்த. தாளை - திருவடிகளை. வணங்கிடின் - பணிந்தால். காலன் - யமன், வருகை - அகாலத்தில் நம் உயிரைக் கொண்டு போக வருவது. இன்று - இல்லையாகும் ; அகால மரணம் நேராது என்பது கருத்து.

19. போகுவம் - போவோம். நன்று - நன்மை. வாணாளை - வாழும் காலத்தை. நண்ணல் - சேர்தல். ஒன்றிய - சேர்ந்த. இன்னே -

இப்பொழுதே. ரத்ன ஓங்கலினில் - இரத்தினகிரியில். வென்றி - வெற்றியை. வீழ்குமின் - விழுந்துவணங்குங்கள்.

20. வீழ்ந்த - இறந்துபோன, எத்துணை - எவ்வளவு. வேந்தர் - அரசர். காலன் - யமன். மானிடர்காள் - மனிதர்களே. சூழ்ந்து - சுற்றிவந்து; வலம் செய்து, பிரதட்சணமாக வந்து. பணிமின்கள் - வணங்குங்கள். தாழ்ந்து - தாழ்வாகப்போய். உறும் - அடைந்து வணங்குங்கள்.

21. உறும் - போர் செய்யவந்த. தாரகன் - தாரகாசுரன். உலைவு - துன்பத்தை. வெறும் - உள்வெளியான. கிரவுஞ்சகிரி - மலையாக நின்ற ஓர் அசுரன். சுடர் - ஒளி. ஆண்டிருப்பான் - எழுந்தருளியிருப்பான். நறும் - வாசனை வீசும். தார் - மாலையை. அணி - அணிந்த. குகன் - பாலமுருகன். நாடுமின் - தேடிச் சென்று வணங்குங்கள்.

22. விழைவு - விரும்பிய பொருள்களை. கூடின் - அடைந்து வணங்கினால். திண்ணம் - உறுதி. ஐயம் - சந்தேகம். இலை - இல்லை; இடைக்குறை. குறிக்கொண்டு - லட்சியமாகக் கொண்டு. அவன் - பாலமுருகனுடைய. ஏத்தி - புகழ்ந்து. பணிகுமின் - வணங்கங்கள். வீடு - முக்தி. இம்மை - இகலோக வாழ்வு.

23. மேய - பொருந்திய. வீரம் உறு வாகு - வீரபாகு. அவுணன் - சூரபத்மன். பணிய - வணங்க. அமரர் - தேவர்கள். விடுத்தாய் - விடுவதைச் செய்தாய். பிழைகள் - தவறுகளை. பொறுத்திடுவான் - மன்னிப்பான். என - என்று நம்பி. போந்து - போய். ஆயவன் - அந்தச் சூரபத்மன். சற்றும் - சிறிதும். தணிகிலன் - தணியவில்லை. இகல் - பகைமை. விதி - அவனுடைய தலைவிதி.

24. அன்னவன் - அந்தப் பால முருகனுடைய. தாள் இணை - இரண்டு திருவடிகளில். வீழ்ந்து - சாஷ்டாங்கமாக விழுந்து. இறைஞ்சின் - வணங்கினால். சதி - துன்பத்தை. தவிர்த்தது - நீங்கியது. மதி - ஞானம். வகை - முறையை ; அருணகிரிநாதன் சொன்ன வகை ; ''சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின். மால் பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன், வேல்பட் டழிந்தது வேலையும் சூரனும் வெற்பும்அவன், கால்பட் டழிந்ததிங் கென்தலை மேல்அயன் கை யெழுத்தே'' என்பது கந்தர் அலங்காரப் பாசுரம். எண்ணுமின் - எண்ணுங்கள். தலைமேல் எழுத்து - விதி.

25. அற்றவர்க்கு - வறியவர்களுக்கு. ஈமின் - கொடுங்கள். செய்மின் - செய்யுங்கள். அடல் - வலிமை. கொற்றவன் - பாலமுருகன். பாலன் - பாலமுருகன். குரை கழலை - ஒலிக்கின்ற வீரக் கழலை. உற்று - அடைந்து. தொழு திடின் - வணங்கினால். பற்று - பாசம்.

வீடு - முத்தி. பார்த்தது - அறிந்தது. அன்று, ஏ : இரண்டும் அடைநிலைகள்.

26. பார்த்து - தரிசனம் செய்து. பணிமின் - வணங்குங்கள். அடியிணை -இரண்டு திருவடிகளில். வீழ்ந்து - சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்து. பரவுமின்கள் - தோத்திரம் செய்யுங்கள். வேர்த்து - வேர்வை உண்டாகி. இது அன்பு மிகுதியால் உண்டாவது. விழைவு - விருப்பம். ஆர்த்து - பலவற்றை வெளிப்படையாகச் சொல்லி. புகழ்மின் - துதியுங்கள். அவன் - பாலமுருகன். இங்கு - இவ்வுலகத்தில். ஈர்க்கின்ற - இழுக்கின்ற. பாசம் - பற்று. அண்ட ஒட்டாது - அணுகச் செய்யாது. தொண்டதே தொண்டாவது. இது - இச்செயல்.

27. தொண்டர் - பக்தர்கள். கண்டு - தரிசித்து. அண்டி - அணுகி. உண்டிருக்கும் - அனுபவிக்கும். சுத்த ஞானம் - பர ஞானம். தண்டை - காலில் அணியும் ஆபரணம். அம் - அழகிய. புண்டரிகம் - தாமரை மலரைப்போன்ற திருவடிகளை. தாழ் - தங்கும். அண்டிய - எழுந்தருளிய. அனுதினமும் - தினந்தோறும். அலர் - மொய்க்கும். குழலாள் - கூந்தலையுடையவள். இந்தப் பாட்டு, ''தொண்டர்கள் டண்டிமொண் டுண்டிருக் கும்சுத்த ஞானமெனும், தண்டையம் புண்டரி சுந்தரு வாய்சண்ட தண்டவெம்சூர், மண்டலம் கொண்டுபண் டண்டரண் டங்கொண்டு மண்டிமிண்டக் கண்டுருண் டண்டர்வின் டோடாமல் வேல்தொட்ட காவலனே'' (கந்தர் அலங்காரம்) என்பதை அடியொற்றியது.

28. வணங்கி - பாலமுருகன் திருவடியை வணங்கி. துதிக்க - தோத்திரம் செய்ய. இணங்கி - சேர்ந்து. குணம் - நல்ல பண்புகள். துட்டன் - கெட்டவன். ஈடேற்றுவாய் - கரையேற்றுவாய். குன்று - மலை. கமழ் - வாசனை வீசும். மா - பெருமையை உடைய. நிணம் - ஊன். கக்கும் - வெளிப்படுத்தும் ; இந்தப் பாட்டு, ''வணங்கித் துதிக்க அறியா மனித ருடனிணங்கிக், குணங்கெட்ட துட்டனை ஈடேற்று வாய்கொடி யும்கழுகும், பிணங்கத் துணங்கை அலகைகொண் டாடப் பிசிதர்தம்வாய், நிணம்கக்க விக்ரம வேலா யுதந்தொட்ட நிர்மலனே'' (கந்தர் அலங்காரம்) என்பதை அடியொற்றியது.

29. நினைந்தும் - தியானித்தும். புகழ்ந்தும் - முருகன் புகழ்களைச் சொல்லியும். அன்றி - அல்லாமல். ஏ : அசை நிலை. கனைந்து - மிகுதியாக. கார் மலையில் - மேகம் தங்கும் பால முருகனுடைய இரத்தின கிரியில், முனைந்த - முனையை உடைய. வை - கூர்மை. நிற்கின்ற - எழுந்தருளியிருக்கும். இனைந்திடும் - வருத்த மடையும். போது - காலத்தில். தருவை - கொடுப்பாய் இந்தப் பாட்டு, ''நின்றும் இருந்தும் கிடந்தும் நினைப்பதுன்னை, என்றும் வணங்குவது

நின்மலர்த் தாள் எழுதாமறையின், ஒன்றும் அரும்பொரு ளேஅரு ளே உற வேஇமயத் தன்றும் பிறந்தவ ளேஅழி யாமுத்தி ஆனந்தமே'' (அபிராமி அந்தாதி, 10) என்பதை அடியொற்றியது.

30. எய்துக என்றே - கொள்கை என்று ; ஏ ; அசைநிலை. ஓதாத - சொல்லாத. நல்லோர்கள் - சான்றோர்கள். ஊற்றம் - வலிமை. பாதாதிகேசம் - பாதம் முதல் தலை வரையில். படைத்தனன் - கொண்டிருந்தேன். சொல்லல் - உன் புகழைச் சொல்லுதல். எளிது - சுலபம்.

31. எளிது அன்று - சுலபம் அல்ல. மானிடராய் - மனிதராய். இதனை - மனிதராய்ப் பிறத்தல் அரிது என்பதை ; ''அரிதரிது மானிடர் ஆதல் அரிது'' என்பது ஔவையார் பாடல். ''பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்நின் சிற்றடியைக், குறுகிப் பணியப் பெறக் கற்றிலேன்'' என்பது கந்தர் அலங்காரம். அளி துன்ற - அன்பு பொருந்த. கடன் - கடமை. களி துன்ற - மகிழ்ச்சி நிறைய. பால - பாலமுருகனே. துளி வந்த - நீர்த்துளி வந்த. துதிக்கும் - தோத்திரம் செய்யும். துணிவு - உறுதி, அன்பர்களுக்கு - அன்பினால் கண்ணீர் வழியும் பக்தர்களுக்கு ; இது, ''பேரானந்தம் உற்றவர்க்கே கண்ணீர்கம் பலைஉண் டாகும்'' (தாயுமானவர் பாடல்) என்பதை எண்ணிப் பாடியது ; ''உடல்குழைய என்பெலாம் நெக்குருக விழிநீர்கள் ஊற்றென வெதும்பி ஊற்ற'' (தாயுமானவர் பாடல்) என்பதும் இக் கருத்தை வலியுறுத்தும்.

32. துன்னியவர் - இருந்தவர்கள். தணிவரும் - தணிக்க முடியாத. உடை - உடைய. காலன் - யமன். தயங்குவர் - வருந்துவர். (உலகவழக்குச் சொல்). அணி - அழகு. அகம் - மனம். நணி - நண்ணி ; அணுகி (இடைக்குறை). ''சூலம் பிடித்தெம பாசம் சுழற்றித் தொடர்ந்துவரும், காலன் தனக்கொரு காலும்அஞ் சேன்கடல் மீதெழுந்த, ஆலம் குடித்த பெருமான் குமாரன் அறுமுகவன், வேலும் திருக்கையும் உண்டே நமக்கொரு மெய்த்துணையே'', ''பட்டிக் கடாவில் வரும்அந்த காலனைப் பார்அறிய, வெட்டிப் புறங்கண் டலாதுவி டேன்வெய்ய சூரனைப்போய், முட்டிப் பொருதசெவ் வேற்பெரு மாள்திரு முன்புநின்றேன், கட்டிப் புறப்பட டாசக்தி வாளென்றன் கையதுவே'' என்னும் கந்தர் அலங்காரப் பாடல்களும் இந்தக் கருத்தை வலியுறுத்தும், ''மரணப்ர மாதம் நமக்கில்லை யாம்என்றும் வாய்த்துணை, கிரணக் கலாபியும் வேலும்உண் டெகிண் கிணிமுகுளச் சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரட்சா, பரண க்ருபாகர ஞானா கரசுர பாஸ்கரனே'' என்பதும் அந்த நூலில் வருவது.

33. நடுங்கும் - நடுங்குவாள். வருந்தும் - வருந்துவாள். நாயகன் - காதலன். நண்ணிலன் - வரவில்லை. அடங்கும் - அடங்கியிருப்பாள். ஒடுங்கும் - ஒரு மூலையில் ஒடுங்கிக் கிடப்பாள். ஆயிழை - இந்தப் பெண். ஆர்ந்து - நிறைந்து. வந்து - எழுந்தருளி. மடங்குதல் - செயலொழிந்திருப்பதை. மா - பெருமையை உடைய. கடம் கவிழ் - மதத்தை ஒழுக விடும். என - என்று சொல்லும்படி, நின்ற - எழுந்தருளிய. காருண்யனே - கருணையை உடையவனே. இது தலைவியின் நிலையைக் கண்டு தோழி கூறிய கூற்று.

34. நீர் உண்டு வீழ - நீர் பெருகி விழ ; அன்பர்களின் இந்த இயல்பை முன்பும் கண்டோம். நெடுநிலம் - நீண்ட தரையில். நிதம் - தினந்தோறும். சீர் - சிறப்பு. மித்திரர் - நண்பர்கள். வளம் - வளப்பம். பேர் உண்ட - புகழ் பெற்ற. நல்லவர் - சான்றோர்கள். ஆசிகள் - ஆசீர்வாதங்கள்.

35. உண்டுண் டுடுடுடு டுண்டென ; அனுகரண ஓசை ; ''கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை, மொண்டுண் டயர்கினும் வேல்மற வேன்முது கூளித்திரள், டுண்டுண் டுடுடுடு டுடு டுடுடுடு டுண்டுடுண்டென் றண்டர்விண் டோடாமல் வேல்தொட்ட காலவனே'' என்பது கந்தர் அலங்காரம். பேரி - பேரிகை. தண்டத்தலைவர் - சேனாபதிகள். சூரன் - சூரபத்மன். தாக்கி - போரிட்டு. அவன் - சூரபத்மன். படையை - சேனையை. குலைத்தவன் - அழித்தவன். குலம் - மேன்மை. வரை - மலை. அண்டும் - எழுந்தருளியிருக்கும். பெருமான் - கடவுள்.

36. தாய் குறை சொல்ல - பெற்றெடுத்த தாய் தம் குறைகளை எடுத்துச் சொல்ல. தமர் குறை சொல்ல - பந்துக்கள் குறைகளைச் சொல்ல. தனிமையினால் - கணவனைப் பிரிந்து தனியாக இருப்பதனால். நோய் பெற்று - பிரிவுத் துன்பத்தை அடைந்து. வாடும் - வாட்டத்தை அடையும். இந் நேரிழைக்கு - இந்தப் பெண்ணுக்கு. உன் - தேவரீருடைய. அருள் நோக்கு - கருணைப் பார்வையை. உதவுவாய் - கொடுப்பாய். வாய் பெற்றதால் - மனிதர்கள் வாயைப் பெற்றதனால், பயன் - பிரயோசனம். நின்னை வழுத்துதல் - தேவரீரை வாழ்த்துதல் : ''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை'' எனப் பிறரும் கூறுதல் காண்க. வாகு உயர்ந்த - தோள்கள் உயரமாக உள்ள. சேய் - பால முருகன். ரத்ன வெற்பில் - இரத்தின கிரியில், பொலிந்து - விளங்கி. சிறந்து - சிறப்பைப் பெற்று. திகழ் - விளங்குகின்ற. குகன் - பால முருகன்.

37. குகை எனச் சொல்லும் - இதய குறை என்று சொல்லப் படுகின்ற. தகராலயத்தில் - தராகாசத்தில். குடி இருப்பாய் - தங்கியிருப்பாய். நகை மிகு - மகிழ்ச்சி மிக்க. வள்ளி - வள்ளி நாயகியையும். தெய்வானையை - தேவானையாகிய பெருமாட்டியையும். அன்பின் - அன்போடு. நயத்திடுவாய் - தேவரீருடைய மனைவியராக ஏற்று விரும்புவாய். இகல் அரும் - ஒப்பற்ற. ரத்ன கிரியினில் - இரத்தினகிரியில். பாலன் என - பால முருகன் என்னும் திருநாமத்தை யாவரும் சொல்லும்படி. இருப்பாய் - எழுந்தருளியிருப்பாய். புகல் அரும் - சொல்லி முடிப்பதற்கு அரிய. சீர் - சிறப்புக்களை. உடையாய் - உடைய பால முருகனே. நினை - தேவரீரை. போற்றி - வாழ்த்தி. புகழுவன் - தேவரீருடைய புகழ்களை எடுத்துச் சொல்லித்துதிப்பேன்.

38. வண்மை - வளப்பம். மிகுந்த - மிகுதியாக உள்ள. உடல் - உடையோம். உடம்பை உடைய மனிதர்களும். மயானத்தில் - சுடுகாட்டில். ஏ : அசைநிலை. கண்பெற - நாம் காணும்படி. ஓர் பிடி சாம்பராய் - ஒருபிடி சாம்பலாகி. ஆவது - ஆவதனை, கண்ட பின்பும் - கண்ட பிறகும். நண்பு உள்ளது என்று - நமக்கு உரிமை உள்ளது இந்த உடம்பு என நினைந்து. இந்தத் தேகத்தை - இந்த உடம்பை. நம்பி - நிலையானதென்ற நம்பிக்கை கொண்டு, ஏ : அசைநிலை. நாளும் - ஒவ்வொரு நாளும். உழைத்து - பாடுபட்டு. உண்பதை - அதனால் வரும் ஊதியத்தை கொண்டு சாப்பிடுவதை. அன்றி - அல்லாமல், நீ என்றது மனத்தை. பால முருகனை - இரத்தினகிரியில் எழுந்தருளியுள்ள. பால முருகனை. ஓர்தி - தியானம் செய்வாயாக. நெஞ்சே - என்னுடைய மனமே.

39. ஓரோர்கால் - ஒவ்வொரு தடவை. வாய்விட்டு - யாவரும் கேட்கும்படி வாய்விட்டு. நம் பெருமான் - நம்முடைய கடவுள். என்று - என்று சொல்லி, ஏ : அசை நிலை. ஓலம் இடும் - கூக்குரல் இடுவாள். சீர் - முருகனுடைய பெருமைகளை. ஓர்கால் - ஒரு தடவையும். ஓவாமல் - நீங்காமல். நெஞ்சில் - தன்னுடைய மனத்தில். நினைப்பாள் - தியானம் செய்வாள். சிவன் தருசேய் - சிவபெருமான் பெற்ற திருமகனாகிய முருக பிரான். ஈரமுடன் - அன்புடன். அருள் செய்குவன்கொல் - கருணை புரிவானோ ? ஓ : அசைநிலை. சொல் என்பதே வினாவாதலின் ஓ அசைநிலை ஆயிற்று. என - என்று சொல்லி. அழுவான் - புலம்புவான். பேர் உடை - புகழை உடைய. பால முருக - இரத்தின கிரியில் எழுந்தருளியுள்ள பால முருகனே. இப் பேதையை - இந்தப் பெண்ணை, பேணுவை - காப்பாற்றுவாயாக. இது பால முருகனை நாயகனாக வைத்து ஒரு தலைவி படும் வருத்தத்தைச் சொல்லியது.

40. பேணும் உடம்பினை - பாதுகாக்கும் தேகத்தை. பெற்றதனால் - அடைந்ததனால். பயன் - பிரயோசனம். பீடு உற - பெருமை

உண்டாக. ஏ : அசைநிலை. ஏண் - ஒப்பு. ஒன்று - ஒன்றும். இலாத - இல்லாத. வேலவனை - வேலாயுதக் கடவுளை. பணிந்து - வணங்கி, இன்புறுதல் - இன்பத்தை அடைதல். ''உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம், உடம்பினில் உத்தமனைக் காண்'' என்பது இங்கே உணர்வதற்குரியது. காணும் - அறியத்தக்க. இவ்வுண்மை - இந்த உண்மையான கருத்தை. அறிந்தேன் - அடியேன் தெரிந்து கொண்டேன். இரத்னக் கவின் கிரியில் - அழகிய இரத்தின கிரியில் எழுந்தருளியுள்ள. மாண் உடை - மாட்சிமை உடைய. பாலமுருகனை - பால முருகன் என்னும் திருநாமம் உடைய பெருமானை. போற்றி - வாழ்த்தி, வணங்கினன் - பணிந்தேன்.

41. வணங்கிய - வளைந்த, வில்லுடை - வில் என்னும் ஆயதத்தை உடைய, வீரர்கள் ஆயினும் - வீரம் உடையவர்கள் ஆனாலும். மாற்றலரை - பகைவர்களை. பிணங்கிய - பகையுடன் செய்த. போரினில் - யுத்தத்தில். வெற்றி கொண்டாலும் - வெற்றியை அடைந்தாலும். பெறும் பயன் என் - அடையும் பிரயோசனம் யாது? கணம் கொடும் - கூட்டத்துடன் ; என்றது யமதூதர் கூட்டத்தை. காலன் வரின் - யமன் உயிரை உடம்பிலிருந்து எடுத்துச் செல்ல வரும்போது. அவர் - அந்த வீரர்களுடைய. வீரந்தான் - வீரமானது. காப்பதுவோ - அந்த யமனிடத்திலிருந்தும் நம்மைப் பாதுகாப்பதோ? மணம் கொள் - நல்ல வாசனை வீசுகின்ற. கடம்ப மலர் மாலை - கடம்ப மலர்களைக் கொண்டு கட்டிய மாலையை மார்பில் அணிந்த. பால - பால முருகனே. வடிவேலனே - வடித்த வேலாயுதத்தைக் கையில் ஏந்திய பால முருகனே.

42. வடிவுடை மாதர் - அழகிய வடிவத்தை உடைய பெண்களின். மயக்கினில் - காம மயக்கத்தில். வீழ்ந்து - அழுந்தி. மதி தவறி - புத்தி கெட்டு, கொடிய பிணியால் - அதனால் உண்டான கொடுமையான நோயினால். வருந்தும் நிலை - வருத்தத்தை அடையும் நிலையை. பெறும் - பெற்ற. கோலம் உளார் - தன்மையைக் கொண்ட மனிதர்கள். நொடிய - நீளமாக உள்ள. வைவேல் உடை - கூர்மையான வேலாயுதத்தை உடைய. பால முருக - பால முருகன் என்னும் திருநாமம் உடையவனே. நின் - தேவரீருடைய. நிலவு - என்றும் நிலவுகின்ற. அடியில் - திருவடிகளில். படிய - தரையில் உடம்பு படியும்படி. வணங்கிடின் - பணிந்தால். நற்பயன் - நல்ல பயன்கள். யாவும் - எல்லாவற்றையும். படைப்பவர் - பெறுபவர்கள் ஆவார்கள்.

43. படைப்பவன் - படைக்கும் தொழிலை உடைய பிரமதேவன். ஆணவம் - அகங்காரம். மிக்கு - மிகுதியாக அடைந்து. நின்னை - தேவரீரை. கண்டும் - பார்த்தும். பண்பு இலனாய் - நல்ல குணம்

இல்லாதவனாகி. மிடுக்கோடு - செருக்கோடு. இருப்பதை - தேவரீரை வணங்காமல் இருப்பதை. பார்த்து - கண்டு. அவன் தன்னை - அந்தப் பிரமதேவனை. வெடுக்கென - வெடுக்கு என்ற ஓசை உண்டாக. ஏ : அசைநிலை. அடுக்கிய - ஒன்றன்மேல் ஒன்றாக உள்ள. குட்டுகள் - தலையின் மேல் குட்டும் குட்டுகளை. அன்னோன் தலையில் - அந்தப் பிரமதேவனுடைய நான்கு தலைகளிலும். அளித்தவனே - கொடுத்தவனே. இடுக்கண் இலாத - துன்பம் ஒன்றும் இல்லாத. இரத்ன கிரியில் - இரத்தினகிரியில். இருப்பவனே - எழுந்தருளியுள்ள பால முருகனே.

44. பவம் அறும் - பிறப்பு அற்றுவிடும் ; பாவங்கள் போய் விடும் என்பதும் ஆம். என்று - என்று எண்ணி. உனை - தேவரீரை. பல்லோர் - பல அடியார்கள். நயந்து - விரும்பி. பணிந்தனர் - வணங்கினார்கள். ஆல் : அசை நிலை. அவம் உறும் - வீணே கழியும். வாழ்க்கையில் - இந்த மனித வாழ்வில். வீண் நாளை - ஒரு பயனும் இல்லாத நாள்களை. போக்கும் - கழிக்கும். அவலம் உளேன் - இழிந்த குணத்தை உடையவன் அடியேன். சிவம் உறும் - மங்கலம் பொருந்திய. நின் அடி - தேவரீருடைய திருவடிகளை. சேவிக்கவைத்து - பணியும்படி அடியேனை வைத்து. திரு அருள் செய் - கருணையைப் புரிவாய். தவர் புகழ் - தவம் உடையவர்கள் புகழ்கின்ற. ரத்னகிரி - இரத்தின கிரியில். அமர் - எழுந்தருளியுள்ள, பால - பாலமுருகனே. தயாபரனே - கருணை உள்ள முருகனே.

45. அத்தகு - அப்படிப்பட்ட. இயைபு உற்ற - உறவு மிக அதிகமாக உள்ள ; ''தாயிற் சிறந்த தயாவான தத்துவனே'' (திருவாசகம் சிவபுராணம்). ஈறு பெறின் - இறந்து போனால். நயம் - அன்பை. பயம் - பயன் ; பிரயோசனம். புரப்பவன் - பாதுகாப்பவன். நண்ணினன் - அடைந்து வணங்கினேன்.

46. இனன்-சூரியன். மனம்கொள-மனமார. அன்னவர்-அந்த நவக்கிர கங்களை. போற்றுதல் - துதித்தல். அறைகுவர் -சொல்வார்கள். சினம் - கோபம். கோள் செயல் - நவக்கிரகங்களால் வரும் இன்பதுன்பங்கள். காண்கிலம் - நாங்கள் காணவில்லை. ''நாள்என் செயும் வினை தான்என் செயும்எனை நாடிவந்த, கோள்என் செயும்கொடும் கூற்றென் செயும்கும ரேசனிரு, தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும், தோளும், கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே'' என்பது கந்தர் அலங்காரம். சேர்பவனே -எழுந்தருளியிருப்பவனே. கனம் - பெருமை. கொள் - உண்டாக.

47. ஊணும் - உணவையும். பூண்கிலள் - அணியவில்லை. துயில்கிலள் - உறங்கவில்லை. பொருப்பு - மலை. ஏண் - பெருமை. கண்டிலன்

- நான் காணவில்லை. செய்குவேன் - செய்வேன். சேண் பெறும் - நெடுந்தூரம் பரவியிருக்கும். சீர் - புகழ்.

48. செய்யினில் - வயலில். சீர் - பெருமை. பொருள் - செல்வம். கவின் கன்னியை - அழகை உடைய, மணமாகாத கன்னிப் பெண்ணை. மையல் - காதல். மா - பெருமையை உடைய. ஐய - அழகிய. பால வேலன் - பாலமுருகன். அனைத்தும் - யாவும்.

49. உண்டிடும்போது - நாம் உணவை உண்ணும்போது. உணல் - உண்ணுதல். அறம் - தர்மம். ஆல் ; அசை நிலை. ''விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.'' (திருக்குறள்) என்பதை காண்க. பண்டையர் - பழங்காலத்திலிருந்த பெரியோர்கள். ''தமக்கென் றுலை ஏற்றார்'' (ஆசாரக்கோவை ; 40). தமக்கு என்று - தங்களுக்காக மட்டும், உலை ஏற்றார் - சோறு சமைக்க உலையை ஏற்ற மாட்டார்கள். பரிவுடனே - அன்புடன் ; ஏ : அசைநிலை. கொண்ட - மேற்கொண்ட. கோலம் - அழகை உடைய திருவுருவத்தை. பணிந்தேன் - வணங்கினேன். விருந்தென - புதியவன் என்று. கொள்ளுவையோ - எண்ணுவாயோ? மண்டு - புகழ்மிக்க. வெற்பினில் - பாலமுருகனுடைய மலையில். பால - இளமையை உடைய முருகனே ; அண்மை - விளி. மயிலவனே - மயில் வாகனத்தை உடையவனே.

50. மயிலினை - நீ வாகனமாகக் கொண்ட மயிலை. ஓங்கார - நல் வடிவு - பிரணவத்தின் நல்ல உருவம் ; ''ஓங்காரத் துட்பொருளாய் நின்றான்'' (தேவாரம்). என்று உன்னி - என எண்ணி. உயர் - நீண்ட. சக்தி வேலினை - ஞான சக்தியாகிய வேலாயுதத்தை ; ''சக்திதன் வடிவே தென்னில் தடைஇலா ஞானம் ஆகும்'' (சிவஞான சித்தியார், 4 : 40.) ஞான உரு-மெய்ஞானத்தின் வடிவம். உணரகிலேன் - உணரும் ஆற்றல் இல்லாதவன். பயில் - காதலுடன் பழகும். வள்ளி - வள்ளி நாயகி. இச்சா சக்தி - மூன்று வகை சக்திகளில் ஒன்று. ''வள்ளியிச்சை தேவானை தான்கிரியை'' (ஒரு புலவர்). தெய்வானை முருகப் பெருமான் தேவியருள் ஒருவர். படர் - விரும்பும். செயலாய் - செயலை உடையவனே. நயந்திலன் - விரும்பி அறிந்தேனில்லை. என் - என்ன. நயந்தவனே - விரும்பி எழுந்தருளி யிருப்பவனே.

51. நயப்பும் - விருப்பமும். இரவும் - இராக்காலமும். பகலதும் - பகற் பொழுதும் ; அது : பகுதிப் பொருள் விகுதி. நண்ணுகிலா - அடையாத. இரவுபகல் என்றது சகல கேவலாவஸ்தைகளை ; ''இராப்பகல் அற்ற இடங்காட்டி யான்இருந் தேதுதிக்கக், குராப்புனை தண்டையந் தாள்அருளாய்'', ''போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும்உள்ளும் வாக்கும், வடிவும் முடிவும் இல் லாதொன்று.

வந்துவந்து, தாக்கும்'' (கந்தர் அலங்காரம்), ''அராப்புனை வேணியன் சேய்அருள் வேண்டும் அவிழ்ந்தஅன்பால் குராப்புனை தண்டையந் தாள் தொழல்வேண்டும் கொடியஐவர், பராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பறல் வேண்டுமென்றால், இராப்பகல் அற்ற இடத்தே இருக்கை எளிதல்லவே'' (கந்தர் அலங்காரம்). உய - உய்ய ; உஜ்ஜீவனம் அடைய (இடைக்குறை). ஒங்கல் - மலை. மயல் அற - மாயை நீங்க. நிற்கும் - எழுந்தருளியிருக்கும். நீப மலர் - கடப்பமலர் மாலையை. அயர்வு - சோர்வு. குணசீல - உயர்ந்த பண்பையும் எளிவரும் தன்மையையும் உடையவனே. பால - பாலமுருகனே. அயில் - வேலாயுதத்தைக் கொண்ட. முருகு - முருகன் ; ''அருங்கடி வேலன் முருகொடு வரீஇ'' (மதுரைக் காஞ்சி, 611).

52. முருகா - முருகக் கடவுளே, குமரா - குமார சுவாமியே. இரத்தின நற் கிரி - பால முருகன் அடிமை வணங்கிடும் இரத்தினகிரியில். முன்பு நின்ற - முன்னே எழுந்தருளி நிற்கும். குருவே - சிவபெருமா னுக்குப்பிரணவோபதேசம் செய்த. குருவே - ஆசிரியனே ; தகராலயம் என்னும் குகையில் எழுந்தருளி யிருப்பவனே. குறைவு இலா - என்றும் குறைதல் இல்லாத. நல் எழில் - நல்ல அழகை உடைய. கோலம் உளாய் - திருவுருவத்தைக் கொண்டவனே ; ''என்றும் அழகியாய்'' என்று பிறரும் கூறுவது காண்க. மரு ஏறும் - மணம் வீசுகின்ற, நீப மலர் மாலை - கடம்ப மலரைக் கட்டிய மாலையை. பூண்டு - அணிந்து. உயர் - யாவரினும் மேலான, வானவனே - கடவுளே ; ''வானவன்காண்'' என்று சிவபெருமானை அப்பர் சுவாமிகள் பாடுவது காண்க. உரு ஏறும் - அழகிய திருவுருவத்தை உடைய. நின் அடி - உன்னுடைய பாதங்களை. போற்ற - வணங்கி வாழ்த்துவதற்கு. இடம் இலை - சிறிதேனும் இடம் இல்லை. உள்ளத்தில் - அடியேனுடைய மனத்தில், ஏ : ஈற்றசை.

53. இடம் இலை நெஞ்சில் - அடியேனுடைய மனத்தில் நின்னை எண்ண இடம் சிறிதேனும் இல்லை. அனு என்று இதனை - இந்த மனத்தை அணு என. இயம்புவர் - சான்றோர்கள் கூறுவர், ஆல் : அசை நிலை. நடைமுறை - நடக்கும் நிலையை. நோக்கிடின் - பார்த்தால். இம்மனம் - இந்த மனமானது. எங்கு எங்கோ - எந்த எந்த இடத்தையோ. நாடுறும் - விரும்பிச் செல்லும். ஏ : அசை நிலை. அடைதரும் - அடியேனிடம் அடைந்த. இஃதை - இந்த மனத்தை, அடக்குவதற்கு - எங்கும் செல்லாமல் அடக்கி நிறுத்துவதற்கு. ஓர் ஆறு - ஒரு வழியை ; ''பாழான இம்மனம் குவியஒரு தந்திரம் பண்ணுவ துனக்கருமையோ ?'' என்று தாயமானவர் பாடலில் வருவது காண்க. அறைகுவையோ - சொல்லுவாயோ ? மிடைதரு - நெருங்கிய. சீர் கொள் - சிறப்பைக் கொண்ட. இரத்தின வெற்பினில் - பால முருகன் அடிமை போற்றும் பால முருகன் எழுந்தருளிய

இரத்தின கிரியில் எழுந்தருளியுள்ள. வேலவனே - வேலை ஏந்திய திருக்கரத்தை உடையவனே.

54. வேல் உண்டு - முருகன் திருக்கரத்தில் ஏந்தி உள்ள வேலாயுதம் இருக்கிறது ; அது நம்மைப்பாதுகாக்கும். துன்பு இல்லை - ஆதலால் நமக்கு எந்த விதமான துன்பமும் இல்லை ஆகும். மஞ்ஞை உண்டு - முருகனுடைய வாகனமாகிய மயில் இருக்கிறது. இன்னல் - அதை வணங்கினால் நமக்கு ஓர் இடையூறும். விளைவது இல்லை - உண்டாவது இல்லை ஆகும். தால் உண்ட - நாவினால் சொல்லும். இடை - முருகனுடைய பலவகையான புகழ்கள். உண்டு - இருக்கின்றன. நாள் தொறும் - ஒவ்வொரு நாளும். ஏத்தி - புகழ்ந்து. ஏ : அசை நிலை. தாழ்ந்திடலாம் - முருகனை வணங்கலாம். கோல் உண்ட - அம்பு தைத்த. மான் போல் - மானைப் போல. துயர் கொண்டு - துன்பத்தை அடைந்து. நெஞ்சே - என்னுடைய மனமே. நீ குலையுறல் - நீ வருந்தாதே. சேல் உண்ட - சேல் மீனைப் போன்ற. கண் - கண்களை உடைய. வள்ளி நாதன் - வளியெம்பெருமாட்டியினுடைய கணவாகிய பால முருகன். உளன் - நம்மைப் பாதுகாப்பதற்கு இருக்கிறான். ரத்னச் செங்குன்றில் - செம்மையான இரத்தினகிரியில், ஏ : ஈற்றசை.

55. குன்றம் எலாம் - மலைகள் எல்லாவற்றிலும். கோயில் கொள் - திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் ; இவற்றை 'குன்று தோறாடல்' என்பர். வேலன் - வேலாயுதத்தைக் கையில் ஏந்திய முருகன் வேல், குழாம் துதிக்க - அடியவர்களின் கூட்டம் வணங்கி வாழ்த்த. நன்று - நன்றாக. உயர்ந்து - உயரமாகி, ஏ : அசை நிலை ரத்னகிரி - இரத்தின கிரியில். பால நல வடிவில் - நல்ல பால முருகன் வடிவத்தில், ஒன்றினன் - பொருந்தியிருக்கிறான். பால முருகன் அடிமைக்கு - பால முருகன் அடிமை எனும் துறவிக்கு. உயர்வு - சிறப்பை. அளித்தான் - கொடுத்தருளினான். கன்று என - பசுவினுடைய கன்றைப் போல ; "கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே" என்று பிறரும் கூறுவது காண்க. நின்று - பால முருகனுடைய சந்நிதியிலே நின்று. அவன் - அவனுடைய. தாள் - இரண்டு திருவடிகளையும், பணிந்து - விழுந்து வணங்கி, ஏத்தின் - வாழ்த்தித் துதிசெய்தால். கதி தரும் - நல்ல கதியை அளித் தருள்வான், ஏ : அசை நிலை. கட்டளைக் கலித் துறையில் ஈற்றில் ஏகாரம் வரும்.

56. கதி அறியாத - செல்லும் நல்ல வழியைத் தெரிந்து கொள்ளாத ; "கதிக்கு வழி காட்டும் கண்ணே" என்று பிறரும் கூறுவது காண்க. குருடனைப் போல - கண் இல்லாதவனைப் போல. ஏ : அசை நிலை. கண் பெறினும் - அடியேன் கண்களைப் பெற்றிருந்தாலும். துதி

அறியாமல் - நின்னைத் தரிசித்துத் துதி செய்வதைத் தெரிந்து கொள்ளாமல். இரத்தின கிரிக் குகன் - இரத்தின கிரியில் எழுந்தருளி உள்ள பால முருகனுடைய. சோதி உரு - சோதிமயமான வடிவத்தை ; ''சோதியே சுடரே'' என்று மாணிக்கவாசகர் திருவாக்கு இங்கே உணர்தற்கு உரியது. அது : பகுதிப் பொருள் விகுதி. ஐ : இரண்டாம் வேற்றுமை உருபு. வணங்காமல் - பணியாமல். இருந்திடின் - இருந்தால். வாழ்க்கை - இந்தப் பிறப்பை. அடைந்த பயன் - பெற்றதனால் உண்டான பிரயோசனம். எதுவும் - ஏதும். இலது ஆகி - இல்லாததாகி. வீணாய் விடும் - வீணாகப் போய்விடும். என்பது - என்ற கருத்தை. எண்ணு - நினைப்பாயாக. நெஞ்சே - என்னுடைய மனமே.

57. சேயாம் முருகன் - சேய் என்ற திரு நாமத்தை உடைய முருகக் கடவுள். நமைக் காக்க - அடியவர் களாகிய நம்மைப் பாதுகாப்பதற்கு. என்று - என. தன் - தன்னுடைய. சிந்தை கொண்டு - திருவுள்ளத்தில் நினைத்து. தேயாப் புகழுடன் - என்றும் குறையாத புகழுடனே. ரத்தின கிரியில் - பால முருகன் அடிமை வணங்கும் இரத்தின கிரியில். திகழுகின்றான் - எழுந்தருளி விளங்குகிறான். நீயோ என்றது தன் மனத்தை. எவர் எவரோ - யார் யாரோ. துணை - நமக்குத் துணை ஆவார்கள். என்று - என. நினைவுறுவாய் - நினைப்பாய். ஆயாத - உண்மையை ஆராய்ச்சி செய்யாத. நெஞ்சமே - என்னுடைய மனமே. இவ்வுடல் - இந்தத் தேகம். நில்லாதது - பலகாலம் நிலையாக இல்லாமல் இருப்பது. ஆம் - ஆகும். என்பது - என்ற உண்மையை. ''என்பது ஆயாத நெஞ்சமே'' என்று பின் முன் ஆகக் கூட்டிப் பொருள் செய்க.

58. பத்துத் தலையைப் படைத்த - பத்துச் சிரங்களைப் பெற்ற. இராவணன் - இராவணன் என்னும் அரக்கன். பாற்கடலில் - பால் நிறைந்த கடலில். நத்தி - விரும்பி. துயின்றவன் - படுத்திருக்கும் திருமால். அம்பால் - எய்த அம்பினால். பாற் கடலில் துயன்றவன் என்றது இங்கே திருமாலின் திருவவதாரமாகிய இராமபிரானை. இறந்தனன் - இறந்து போனான். நானிலத்தில் - உலகத்தில். அத்தகை - அத்தகைய. வல்லவன் - பலத்தை உடையவனும். பொன்றியதை - இறந்ததை. அறிந்தாலும் - தெரிந்து கொண்டிருந்தாலும். இன்னும் - இன்னமும். புத்தி - உண்மையை உணரும் புத்தி. வந்து - அடைந்து, ஏ : அசை நிலை. ரத்ன வெற்போன் - இரத்தின கிரியில் எழுந்தருளிய பால முருகனை. தொழா விடின் - வணங்கா விட்டால். பொற்பு - மேலான குணம். எது - வேறு எது இருக்கிறது ?

59. எது நிலை - உலகத்தில் எந்தப் பொருள் நிலையாக நிற்பது. எது நிலையாதன - எந்தப் பொருள்கள் நிலையாதன ; எது : ஒருமை பன்மை மயக்கம். என்று - என்று எண்ணும். அறிவு - அறிவை. எய்தி நின்றால் - அடைந்தால். கதுமென - விரைவில். ரத்னகிரியினில் - பால முருகன் வாழும் இரத்தின கிரியினில் எழுந்தருளியுள்ள. பாலனை - பால முருகனை. கண்டு - தரிசித்து. தொழுது - வணங்கி. இது கடன் - இது - நாம் செய்ய வேண்டிய கடமை. என - என்று எண்ணி. நிற்றல் - அந்த எண்ணத்தால் நிலையாக நின்று வாழ்தல். நற்பயன் - பிறந்ததனால் உண்டான நல்ல பயன். காணுக - இந்த உண்மையை அறிவாயாக. என்றன் நெஞ்சே - என்னுடைய மனமே. எதுவரினும் - எந்தத் துன்பம் வந்தாலும். வாட்டம் - அதனால் வாட்டத்தை அடைதல். இல்லாது - இல்லாமல். இருக்க - இருக்கும்படியாக. இயலும் - முடியும். அன்று, ஏ : இரண்டும் அசை நிலைகள்.

60. அன்றே - பழங்காலத்தில் ; பண்டறி சுட்டு. உனக்கு - தேவரீருக்கு. இ : குற்றியலிகரம். யான் - அடியேன். ஆள் ஆகிவிட்டேன் - தொண்டனாகி விட்டேன். அரிய குணக்குன்றே - அரிய பண்புகளில் மலை போல உயர்ந்து நிற்பவனே ; என்றது பால முருகனை. இரத்தின மாமலை - பெருமையை உடைய இரத்தின கிரியில். நின்ற - எழுந்தருளியுள்ள. குமர - குமரக் கடவுளே. குகா - தகராலயம் என்னும் இடத்தில் வாழ்பவனே. இன்று - இப்போது. எனக்கு - அடியேனுக்கு. ஏதும் - சிறிதளவும். பயம் இல்லை - எந்த விதமான அச்சமும் இல்லை. காண் : அசை நிலை. காலன் - யமன். எய்துகினும் - உடலிலிருந்து உயிரைப் பிரித்து எடுத்துப் போக வந்தாலும். 'எய்து கினும் பயம் இலை' என்று பின் முன்னாகக் கூட்டிப் பொருள் செய்க. உன்றனை - தேவரீரை, ப் : சந்தி. போற்றி - வாழ்த்தி வணங்கி. ஏ : அசை நிலை. ஓட வைப்பேன் - அந்த யமனை ஓடும்படி செய்வேன். அஃது - அவ்வாறு செய்வதற்குக் காரணம். உனது அருளே - உன்னுடைய கிருபையே.

61. அருளை - இறைவனுடைய கருணையை. பெறுவது - அடைவது. அரிது அரிது - மிக மிக அரியது. என்பர் - என்று சொல்லுபவர்களாகிய. அவர் - அந்த மனிதர்கள். பலர்-பலராவர்; ஏ : அசை நிலை. தெருள் உடையோரே - அறிவில் தெளிவை உடைய சான்றோர்களோ. மிக எளிது - இறைவன் அருளைப் பெறுவது மிகவும் எளியதான காரியம். என்பர் - என்று சொல்லுவார்கள். திறம் அறியேன் - அடியேன் இந்த இயல்புகளை அறியும் இயல்பு இல்லாதவன். மருள் உடையேன் - மயக்கத்தை உடையவன். ரத்ன வெற்பினில் - பால முருகன் அடிமை தொழும் இரத்தின கிரியில். வாழும் - எழுந்தருளி யிருக்கும். மயிலவனே -

மயில் வாகனக் கடவுளே. குருளைபோல் - பசுவின் கன்றைப் போல, என்னை - அடியேனை. நீ - பால முருகனாகிய நீ. ஆண்டு கொண்டால் - ஆளாக ஏற்றுக் கொண்டால். என்ன குற்றம் உண்டு - தேவரீருக்கு என்ன குற்றம் உண்டாகும் ?

62. குற்றம் இலாதவர் - ஒரு குற்றமும் இல்லாத மனிதர். இவ்வுலகத்தில் - இந்தப் பூமண்டலத்தில். குறைவு - மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். குற்றம் பெற்றவரே - குற்றங்கள் உள்ளவர்களே. பலர் - பலராவார்கள். அஃதை - அந்த உண்மையை. நினைந்து - எண்ணி. பெரிதும் - மிகவும். நையாது - வருந்தாமல். உற்ற நற்சீலர் - நல்ல சீலத்தை உடைய பெரியவர்கள். உறைவு இடம் - வாழும் இடத்தை. தேடி - தேடிச் சென்று அடைந்து. உயச் செய்குவாய் - உஜ்ஜீவனம் அடையும் படியாகச் செய்தருள்வாய். கற்றவர் - நல்ல நூல்களைக் கற்று உணர்ந்த பெரியவர்கள். போற்றும் - வாழ்த்தி வணங்கும். இரத்தின வெற்பு - இரத்தினகிரியில். உறை - எழுந்தருளியிருக்கும். காவலனே - பால முருகனே.

63. காவலனே - யாவற்றையும் பாதுகாக்கும் கடவுளே. சதி இட்டு நடக்கும் - தாள அறுதி போட்டு உலாவும். சலாபம் உடை - தோகையை உடைய. மா வலனே - குதிரையைப் போன்ற மயில் வாகனத்கதை உடையவனே. ''கலபத்து ஏர் மா'' என்று கந்தர் அநுபூதியில் வருவது காண்க. மெய்ஞ்ஞான வடிவாய் - உண்மையான ஞானத்தின் சொரூபமாகி. மலர்ந்தவனே - விளங்கியவனே; ''நீயான ஞான விநோதம்'' என்று கந்தர் அலங்காரத்தில் வருவது காண்க. பாவலர் போற்றும் - பாக்களைப் பாடுவதில் வல்லவர்கள் வாழ்த்தி வணங்கும். இரத்தின நற்கிரி - நல்ல இரத்தினகிரியின். பால் உறைவாய் - இடத்தில் எழுந்தருளியிருப்பவனே. ''கற்றவர்தொழு தேத்துசீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடு முடி'' என்று தேவாரத்தில் வருவது இங்கே அறிதற் பாலது. நா வலம் - அடியேனுடைய நாக்கில் சொல் வளத்தை. ஈந்து - கொடுத்தருளி. உனை - தேவரீரை. வாழ்த்தும் - பலபுகழைச் சொல்லி வாயார வாழ்த்துகின்ற இயல்பினை - தன்மையை. நல்குவை - தந்தருள்வாயாக.

64. நல்குரவால் - தரித்திரத்தால். ஏ: அசை நிலை. நலிந்து - வாட்டத்தைப் பெற்று. துயர் உறும் - துயரத்தை அடையும். நன் மக்களை - நல்ல சான்றோர்களை. செல்க - போய்விடுக. என்னாமல் - என்று சொல்லி அனுப்பிவிடாமல். அரவணைத்து - பாதுகாத்து, ஏ : அசைநிலை. நற் சிறப்பு அளிக்க - நல்ல மேன்மைகளை எல்லாம் வழங்குவதற்கு. ஒல்லும்படி - முடியுமாறு. செய்தருள்வாய் - அடியேனைச் செய்து கிருபை பாலிப்பாய். இரத்தின ஓங்கல்

மிசை - இரத்தின கிரியின்மேல். ச் : சந்தி. சொல்லும் - யாவரும் சொல்லி வணங்கும். புகழொடு - கீர்த்தியோடு. நின்று - எழுந்தருளி நின்று. அருள்வோய் - கிருபை பாலிக்கும் பால முருகனே. பெரும் சோதியனே - பெரிய சோதி வடிவாக உள்ள பால முருகனே ; ''சோதியே சுடரே'' என்ற மணிவாசகர் திருவாக்கும், ''அருள்-விளக்கே அருட் சுடரே அருட்சோதிச் சிவமே'' என்னும் திருவருட்பாவில் உள்ள பகுதியும் இங்கே கருதுவதற்குரியது.

65. சோதிக்க வேண்டா - அடியேனை நீ சோதனை செய்ய வேண்டாம். அடியேன் - அடியேனாகிய யான். மிக ஏழை - மிகவும் அறிவில்லாதவன். சுத்தம் இலேன் - மனம் வாக்குக் காயம் இவற்றில் தூய்மை இல்லாதவன். யாதுக்கும்-எந்த வேலைக்கும். சற்றும் - சிறிதளவாவது. பயன் படல் - பிரயோசனப்படுதல். இல்லேன் - இல்லாதவன். இளைந்து நின்றேன் - வருந்தியிருக்கிறேன். வா - என்னிடம் வா. திக்கு - கதி. நான் உனக்கு - உனக்கு நான் ஆவேன். என்று - என்று அருள் புரிந்து. அபயம் கொடு - அடைக்கலத்தைத் தந்தருள்வாய், மா மயிலோய் - குதிரையைப் போன்ற மயில் வாகனத்தை உடைய பால முருகனே ; மா - பெரிய என்னும், ஆம், நீதிக்கு - நியாயத்தைச் செலுத்துவதற்கு. வல்லவர் - வல்ல இயல்பை உடைய சான்றோர்கள். போற்றும் - வாழ்த்தி வணங்கும். இரத்ன நெடுங்குன்றனே - உயர்ந்த இரத்தின கிரியில் எழுந்தருளியிருக்கும் பால முருகனே.

66. குன்றாத - குறையாத. செல்வமும் - செல்வம் முதலாகிய பொருள்களும். கோது இலா நெஞ்சமும் - குற்றம் இல்லாத மனமும். கூடும் நண்பர் - சேரும் நண்பர்களுடைய. பொன்றாத - என்றும் நீங்காத. நட்பும் - தோழமையும். பொலிவும் - விளக்கமும். நின் - உன்னுடைய. பாதத்தை - திருவடிகளை. போற்றுவதும் - வாழ்த்தி வணங்குவதும். என்றேனும் - எந்த நாளிலும். எக்காலும் - எந்தத் தடவையும். நின்னை - தேவரீரை. மறவா - மறக்காத. இயல்பும் - தன்மையும். அருள் - கொடுத்தருள்வாயாக. நன்று ஆனவர் - நற்குணங்கள் பொருந்திய பெரியவர்கள். புகழ் - புகழ்ந்து வணங்கும். ரத்னகிரியை - இரத்தின கிரி என்னும் திருத்தலத்தை. நயந்தவனே - விரும்பி எழுந்தருளியிருக்கும் பால முருகனே.

67. தவசியாய் - தவம் செய்பவனாக. போகுதல் - செல்லுதல். வேண்டும் - அவசியம். என்று இல்லை - என்ற நியதி இல்லை. தனி யோகமும் - தனியே இருந்து செய்யும் அஷ்டாங்க யோகமும் ; தனி - ஒப்பற்ற என்றலும் ஆம். அவசியம் இல்லை - வேண்டும் என்ற கட்டாயமில்லை. இரத்தின நற்கிரி - நல்ல இரத்தின கிரியை. ஆளும்-ஆட்சி புரிந்து எழுந்தருளியிருக்கும். அவன்-அந்தப் பால

முருகன். நலமலர் போல் - நல்ல தாமரை மலர்களைப் போன்ற. அடி - திருவடிகளை. தம் : அசை நிலை. ஐ : இரண்டாம் வேற்றுமை உருபு. வணங்கும் - வணங்கித் தொழும். நாடி-அந்தப் பெருமானைத் தேடி அடைந்து. என்றும் - எக்காலத்திலும். அவம் இலாது - சென்று வீணுகப் போகாமல் ஏ : அசை நிலை. போது போக்கிடின் - காலத்தைக் கழித்தால். அஃதே - அதுவே. அரும் தவம் - அரிய தவம் ஆகும்.

68. தவத்தால் - தந்தை தாயர் சிறந்த தவம் செய்ததனுல். சிறந்த - சிறப்பை உடைய. திருஞான சம்பந்தர் - திருஞான சம்பந்த மூர்த்தி நாயனுர். தாம் : அசை நிலை. முருகன் - முருகனுடைய. அவதாரம்-திரு அவதாரம். என்பர் - என்று அருணகிரி நாதர் முதலிய சான்றோர்கள் சொல்லுவார்கள் ; ''உறைபுகலியூரில் அன்று வருவோனே'' என்று திருப்புகழில் வருவது காண்க. அவர் - அந்தத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர். பெற்ற பேற்றினை - பெற்ற நலங்களை ஆய்ந்து கொண்டு - ஆராய்ச்சி செய்து கொண்டு. சிவநாதனை - சிவபெருமானை. அவன் சேயினை - அவனுடைய திருமகனுகிய பால முருகனை. போற்றிடும் - வாழ்த்தி வணங்கும். சிந்தை இலேன் - எண்ணம் இல்லாதவன் யான். புவனேசை - எல்லாப் புவனங்களுக்கும் தலைவியாகிய உமா தேவியாருடைய. சேயனே-திருக்குமாரனே. ரத்னப் பொருப்பினில் - இரத்தின கிரியில் போந்தவனே - எழுந்தருளியிருக்கும் பால முருகனே.

69. போந்தை நெடு மரம் - உயர்ந்த பனை மரம். சற்றும் - சிறிதளவாவது. நிழல் இன்றி - நிழலே இல்லாமல். போந்தது போல - இருப்பது போல. ஏய்ந்த - என்னுல் இயன்ற. உதவியை - உபகாரத்தை. யார்க்கும் - எவருக்கும். செயாத - செய்யாத. இயல்பு உடையேன் - தன்மையை உடையவன் நாயேன். வாய்ந்த - வாய்ப்பாக உள்ள. நின் - தேவரீருடைய. சீறடி - சிறிய திருவடிகளை வாழ்த்தும் - வாழ்த்தி வணங்கும். வகையையும் - முறைகளையும். மற்று - வேறு. அறியேன் - அடியேன் அறியாதவன். ஓய்ந்தனன் - செயல் அற்று நிற்கின்றேன். நீ அருள்வாய் - தேவரீர் திருவருள் பாலிக்க வேண்டும். ரத்ன ஓங்கலில் - இரத்தின கிரியில். உள்ளவனே - எழுந்தருளியிருக்கும் பால முருகனே.

70. ''உள்ளத்தைச் சொன்னுல் உடம்பெரிச்சல்'' என்பது ஒரு பழமொழி. உள்ளத்தை - உண்மையை. சொன்னுல் - வெளிப்படையாக யாவரும் கேட்க எடுத்துச் சொன்னுல். உடம்பு - குற்றம் உள்ளவனுடைய உடம்பு. எரிச்சல் - எரியும் தன்மையை அடையும். உற்ற - அடைந்த. நல்லோர் - நல்ல பெரியவர்கள். மெள்ள - மெல்ல. தம் நற்றயையால் - தம்முடைய நல்ல கருணையினால், ஏ : அசை நிலை. அறிவு விளம்பினரேல் - அறிவுரையை

அடியேனுக்குச் சொன்னார்களானால். கொள்ள - அதை ஏற்றுக் கொள்வதற்குரிய. திறம் குன்றி - இயல்பு இல்லாமல். காதிலான் போல - செவிடனைப் போல. குமைந்திருப்பேன் - வருந்திக்கொண்டிருப்பேன். எள் அத்தனை - எள்ளின் அளவாவது. நின் - தேவரீருடைய. அருள் தா - கருணையைத் தந்தருள்வாயாக. இரத்தின எழில் வெற்பனே - அழகை உடைய இரத்தின கிரியில் எழுந்தருளியுள்ள பால முருகனே.

71. வெற்பெலாம் - எல்லா மலைகளிலும். நின்று - எழுந்தருளி நின்று. அருள் செய்குவை - திருவருள் பாலிப்பாய். "குன்று தோறாடல்" என்பது முருகன் படை வீடுகளில் ஒன்று. வெற்பினர் - மலையில் வாழும் குறவர்கள். வேலனைக் கொண்டு - பூசாரியைக் கொண்டு; கையில் வேலை அடையாளமாக வைத்துக் கொண்டிருப்பதனால் பூசாரிக்கு வேலன் என்ற பெயர் வந்தது. அற்புடனே - அன்போடு. வெறி ஆட - ஆட்டைப் பலி கொடுத்து வெறிக்கூத்து ஆட. அங்கே வந்து - அவ்விடத்திற்கு எழுந்தருளி வந்து. அருள் புரிவாய் - கருணை பாலிப்பவனே. சிற்பரனே - ஞானமாக உள்ள மேலானவனே; சித் - ஞானம். ரத்ன வெற்புடைப் பால - இரத்தினகிரியில் எழுந்தருளியுள்ள பால முருகனே. திகைக்கும்-மயங்கும். என்றன் - அடியேனுடைய. அற்ப மதியினை - கொஞ்சமாக உள்ள புத்தியை. போக்கி - மாற்றி. நல் ஞானம் - நல்ல ஞானத்தை. அருளுதி - வழங்கியருள்வாய்.

72. அருள் என்பது - கருணை என்று சொல்லப்படுவது. அன்பு ஈன் குழவி - அன்பினால் பெறப்பட்ட குழந்தை. என்று - என, ஏ : அசை நிலை. உரைத்தார் - திருக்குறளில் சொன்னார் ; "அருள் என்னும் அன்பீன் குழவி, பொருள் என்னும், செல்வச் செவிலியால் உண்டு" என்ற குறளை நினைந்து எழுதியது இது. பெரியார் - பெரியவராகிய. திருவள்ளுவர் - திருவள்ளுவ நாயனார். எனக்கு - அடியேனுக்கு. அன்பும் இலை - அவர் சொன்னபடி அன்பும் இல்லை. அருள் சேருமதோ - அருள் என்னைச் சேருமோ ? கரு உள்ளளவும் - உடம்பு இருக்கும் வரையிலும். சுகம் அது இலாத - சுகமே இல்லாத ; அது: பகுதிப் பொருள் விகுதி. கதி - நிலையை. போக்குவாய் - மாற்றியருளுவாய். குரு என் - சிவபெருமானுக்குப் பிரணவோபதேசம் செய்த குரு என்ற புகழ் கொள் - புகழை உடைய. இரத்ன கிரி - இரத்தின கிரியில் உறை - எழுந்தருளியிருக்கும். கோழியனே - கோழிக் கொடியை உடைய பால முருகனே ; "கோழிக் கொடியன்" என்று கந்தர் அலங்காரத்தில் வருவது காண்க.

73. கோழிக் கொடியன் - சேவலைக் கொடியாகக் கொண்ட பால முருகனுடைய. அடி பணியாமல் - பாதங்களை வணங்காமல்.

குவலயத்தே - உலகத்தில். வாழ-வாழ்க்கையை நடத்த. கருதும் - எண்ணும். மதியிலி-அறிவு இல்லாதவன்; ''கோழிக் கொடியன் அடிபணி யாமல் குவலயத்தே, வாழக் கருதும் மதியிலிகாள்'' என்பதனை நினைவிற் கொண்டு பாடியது. மாசு - குற்றத்தை. அகற்றி - போக்கி. ஆழ - மனத்தில் ஆழமாக. தாளை - திருவடியை. புரிவாய் - செய்வாய். சூழும் - மிகுதியாக அமைந்த. மேவிய - எழுந்தருளிய. தூயவனே - பரிசுத்தமாக உள்ள பால முருகனே.

74. தூயவர் - மனமொழி மெய்களில் சுத்தத்தை உடைய சுத்தரான பெரியவர்களுடைய. நேயம் - நட்பு. இருந்தால் - இருக்குமானால். மெல மெல - சிறிது சிறிதாக. தூய்மைவரும் - நமக்கும் சுத்தம் உண்டாகும். ஏய - பொருந்திய பல - பலவாகிய. தீங்கு எல்லாம் - எல்லாத் தீமைகளும். நீங்கும் - போய்விடும். என - என்று, ஏ : அசை நிலை. இயம்புவர் - பெரியவர்கள் சொல்வார்கள். ஆல் : அசை நிலை. ஆய - அத்தகைய. அத் தூயவரோடு - அந்தப் பரிசுத்தம் உள்ளவர்களோடு. ஏ : அசை நிலை. இணங்க - சேர்ந்திருக்க. அருள் தருவாய் - அடியேனுக்குக் கருணை பாலிப்பாய். மாயன் மருகா - திருமாலினுடைய மருகனே. இரத்தின நற்கிரி - நல்ல இரத்தினகிரியில். வாழ்பவனே - எழுந்தருளியுள்ள பால முருகனே.

75. கிரி என - மலை என்று சொல்லும்படி. ஓங்கி - சிறப்பைப் பெற்று. துளக்கம் இல்லாது - நடுங்குவது இல்லாமல். கிளர்பவர்கள் - விளங்குபவர்கள் நரி என - நரி என்று சொல்லும்படி. ஒல்கி - ஒடுங்கி. நடுங்குதல் - நடுக்கத்தை அடைதல். இந்த மா ஞால இயல் - இந்தப் பெரிய உலகத்தின் இயல்பு ஆகும். உரிய - வணங்குவதற்கு உரிய. நின்றன்னை - தேவரீரை. வணங்கின் பணிந்தால். அமைதி - சாந்தம். உளத்து - மனத்தில், அமையும் - சேரும். அரிய - அருமையாகிய. இப்பேற்றை - இதனை அடையும் பாக்கியத்தை. அருள்வாய் - அடியேனுக்கு வழங்கியருளுவாய். இரத்ன அடல் வெற்பனே - இரத்தினகிரியில் எழுந்தருளியுள்ள ஆற்றல் மிக்க பாலமுருகனே.

76. பன்னும் - பன்னுகின்ற. பனுவல் - பஞ்சு. என - என்று சொல்லும்படி. நெஞ்சு - அடியேனுடைய மனம். பாய்ந்து - பல இடங்களுக்குப் பாய்ந்து சென்று. படர் தரும் - படரும், ''நான்படும் பாடு சிவனே நவிலுபஞ்சுதான் படுமோ?'' என்னும் திருவருட்பாவில் உள்ள பகுதி இங்கே சிந்திப்பதற்குரியது. இஃது - இந்த மனம். உன்னும் - எண்ணும். பொருள் ஒன்று அல - ஒரு பொருள் அல்ல. பல கோடி உறும் - பல கோடியாக அமையும். இதனை - இந்த மனத்தை. நின் - தேவரீருடைய. நல் அடி இணை

- நல்ல இரண்டு திருவடிகளை. சிந்திக்க - தியானம் செய்ய, நல்லருள் - நல்ல கிருபையை. நீ புரிவாய் - தேவரீர் செய்தருள வேண்டும். மின்னும் - பிரகாசிக்கும். சுடர்வேல் - ஒளியை உடைய வேலாயுதத்தை, இது மேல் வரும் மேலவனுக்கு அடை. இரத்தினகிரி - இரத்தினகிரியில். உறை - எழுந்தருளியிருக்கும். மேலவனே - எல்லாருக்கும் மேலாக உள்ள பால முருகனே.

77. மேலவன் - மேலே உள்ளவன். கீழவன் - கீழே உள்ளவன். நாப்பண் உள்ளான் - நடுவில் இருப்பவன். எங்கும் - எவ்விடத்திலும், மேய - தங்கிய. பிரான் - கடவுள். காலனைக் காலால் உதைத்தவன் - யமனைத் தன் திருவடியால், மார்க்கண்டனை அந்த யமன் பிடிக்க வந்தபொழுது உதைத்த சிவபெருமானுடைய. சேய் - திருமகன். எனை - அடியேனை. காத்திடுவான் - பாதுகாத்து அருள்புரிவான். சீலம் ஆர்ந்தோர் - நற்குண நற்செயல்கள் நிரம்பிய சான்றோர்கள். போற்றும் - வாழ்த்தி வணங்கும். ரத்ன கிரியில் - இரத்தினகிரியில். திகழுகின்றான் - விளங்குகின்றான். பாலமுருகன் எனும் பெயர் - பால முருகன் என்று சொல்லும் திரு நாமத்தை. சொல்லி - சொல்லித் துதித்து. பரவிட - வாழ்த்தி வணங்க.

78. பரவி - துதித்து. பணிந்து - வணங்கி. பல பெரியோர் பாடல் - அருணகிரிநாதர் முதலிய பெரியோர்களின் திருப்புகழ் முதலிய பாடல்களை. பாடி நின்று - பாடிப் பாலமுருகனுடைய சந்நிதியில் நின்று. விரவிய - கூடிய. தொண்டருடன் - பக்தர்களோடு. பயின்று - பழகி. அன்னவர் - அந்தப் பக்தர்களுடைய. மேன்மையினை - பெருமையை; இன் : சாரியை. கரவு - மறைத்தல். உளத்தினைக் கண்டு - மனத்தில் உள்ள பக்தியை அறிந்து. அவர்-அந்தப் பக்தர்களுடைய. காலில் - திருவடிகளில். விழுந்து - சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி. உரம் - அறிவை, பெற - அடைய. அருள் - திருவருள் புரிவாய். ரத்னகிரி-இத்தினகிரியில். உறை-எழுந்தருளியிருக்கும். உத்தமனே - உத்தமமான பண்புகளை உடையவனே ; ''உத்தமன் அத்தன் உடையான்'' (திருவாசகம்).

79. அத்தன் - அப்பன் ; தலைவன். உடையான் - என்னை உடையவன் ; என்னை ஒரு பொருளாகக் கருதி ஏற்றுக் கொண்டவன். அடியே - திருவடிகளையே ; ஏ - பிரிநிலை ; வேறு ஒன்றும் நினையாமல் என்றபடி ; ''அடியே நினைந்துருகி'' (திருவாசகம்). உளம் நினைந்து - மனத்தில் தியானித்து. மத்த மனத்தொடு - பைத்தியம் பிடித்த மனத்தோடு. மால் இவன்-பைத்தியம் பிடித்தவன் இவன். என்ன - என்று என்னைப் பார்த்தவர் சொல்ல ; ''மத்த மனத்தொடு மால் இவன் என்ன மனநினைவில், ஒத்தன ஒத்தன பேசிட'' (திருவாசகம்). வகுத்திடுவாய் - என்னை அமையச் செய்தருள்வாய். சத்தம் - ஒலி.

மிகுத்த - மிகுதியாக உள்ள. புகழ் - புகழை உடைய. உறை - எழுந்தருளியிருக்கின்ற. சற்குணனே - உண்மையான நற்பண்புகளை உடையவனே. பத்தன் - பக்தன். எனும்படி - என்று சொல்லும்படி. வணங்கு - பணிந்திடும். அருள் - திருவருளை. பாலிப்பை - அருளுவாய் ; பாலித்தல் - அருளுதல் ; ''சிற்றம்பலம் - இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே'' (தேவாரம், 4 :1).

80. பால் என்பது மொழி - இவள் சொல்லும் வார்த்தைகள் பாலைப் போல இனிமை ஆனவை. கால் - பாதம். ''பாலென் பதுமொழி பஞ்சென் பதுகால்'' (கந்தர் அலங்காரம்). பதும மலர்க் கோலம் - தாமரை மலரின் அழகை உடையது. முகம் - இந்தப் பெண்ணின் முகம். என்று - என்று எண்ணி. அரிவையர் - பெண்களுடைய. காமத்தை - ஆசையை. கொண்டு - மேற்கொண்டு. சீலம் பெறுவோர் - நற்பண்புகளை உடைய சான்றோர். சீலம் - எளிமையாய் இருக்கும் தன்மை. பெறுவோர் - பெற்ற சான்றோர்கள். புகழ் - புகழ்ந்து வணங்கும். தேவ - தேவனே, ''தேவர்கோ அறியாத தேவ தேவன்'' (திருவாசகம் திருச்சதகம் 30). ஏலும்படி - இயலும் அளவில். புகழ்ந்து - உன் புகழ்களைச் சொல்லி. அவனுடைய புகழ்கள் அளவிறந்தன. எனும்படி - என்று அமைந்தபடி. ஏத்துதற்கு - துதிப்பதற்கு. ஓர் சொல் - ஒரு வார்த்தையை. இயம்புவை - சொல்லி அருள்வாய்.

81. இயம் பல - பல வகையான வாத்தியங்கள். முழங்கும் - மிகுதியாக ஒலிக்கும். அணுகி - அடைந்து. நயம் பெற - நன்மை எனக்கு உண்டாகும்படி. வணங்கி - வழிபட்டு. உயும் வகை - உஜ்ஜீவனம் அடையும் வழியை ; உயும் இடைக்குறை. நல்கிடுவாய் - தந்தருள்வாய். இலார் - ''இல்லாத பெரியோர்கள், ''பயம் இலார்'' ''உடையார் ஒருவர் தமர்நாம் அஞ்சுவ தியா தொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை'' (அப்பர் தேவாரம், 2.1.10). போற்றும் - துதித்து வணங்கும். பண்ணவனே - கடவுளே ; ''பண்ணவன் எண்குணன்.'' (சிலப்பதிகாரம், 10 : 188). சயம் - வெற்றியை. பெறும் - அடையும். வேல - வேலாயுதத்தை உடையவனே. ஞானத் திருவுரு - ஞானமே ஆன அழகிய வடிவம் ; ''நீயான ஞான விநோதம்'' (கந்தர் அலங்காரம்). சார்பவனே - ஏற்றிருப்பவனே.

82. சார்ந்து - நின்னை அடைந்து. பணிவது - வணங்குவது. தகை - உயர்ந்த பண்பு. ஒன்று இலை - வேறு ஒன்றும் இல்லை ; உம்மை தொக்கது ; இலை : இடைக்குறை. ஆர்ந்த - சேர்ந்த. தொண்டர் - பக்தர்களுடைய. அடி பணிந்து - திருவடிகளை வணங்கி. அவ்வியல்பு - அவர்கள் மேற்கொண்ட அந்தப் பக்தியை. ஆர - நிரம்ப. அருள் - அருள்புரிவாய். தேர்ந்த - நூல்களை ஆராய்ந்து

உண்மைப் பொருள் இது என்று தெரிந்து கொண்ட. அறிவினர் - ஞானம் உள்ளவர்கள். போற்றும் - துதித்து வணங்கும். திரு - அழகை உடைய. வளங்களை உடைய. ஓர்ந்து - ஆராய்ந்து. இந்த நல் நிலை - உன்னை வணங்கும் இந்த நல்ல நிலைமையை. பெறும் - அடையும். ஆற்றை - வழியை. உரைத்து அருளே - சொல்லி அருள்புரிவாயாக.

83. உரைத்து - உரைகல்லில் உரைத்துப் பார்த்து. பொன் மாற்றை - தங்கத்தின் மாற்றை. உணர்வர் - அறிந்து கொள்பவர். வல்லவர் - அந்தக் கலையில் வல்லமை உடையவர்கள். உரைத்து - சொல்லி. பணிந்திடின் - வணங்கினால். எற்கு - அடியேனுக்கு ஒரு மாற்று - ஓர் சிறப்பு. இங்கு - இவ்விடத்தில். கரைத்த - கரையச் செய்ச் செய்த. ஆடி - அபிடேகம் செய்யப் பெற்று. களிப்புறும் - மகிழ்ச்சியை அடையும். காவலனே - காக்கும் தெய்வமே. விரைக் கடம்பை - வாசனையை உடைய கடம்பமலர் மாலையை. அணி - அணிந்த. தோளினாய் - தோள்களை உடைய பாலமுருகனே.

84. பவன் - கடவுள். எம்பிரான் - அடியவர்களாகிய எங்களுக்குத் தலைவன். விண்ணவர் - தேவர்கள். பணிவோன் - வணங்குகின்றவன் ; ''பவன்எம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண் ணோர்பெருமான்'' (திருவாசகம், திருச்சதகம், 9). கங்கை - கங்கை என்னும் பெரிய ஆறு. பாய் - வேகமாகப் பாய்ந்த. சடையான் - சடையை உடையவன். ''விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல், மண்ணுக் கடங்காமல் வந்தாலும் - பெண்ணை, இடத்திலே வைத்த இறைவர் சடாம, குடத்திலே கங்கையடங் கும்'' (காளமேகப் புலவர் பாடல்) என்பது இக்கருத்தை வற்புறுத்தல் காண்க. சிவன் தரு பால - சிவபெருமான் பெற்ற பால முருகனே. உறை - எழுந்தருளியிருக்கும். தேவ - கடவுளே. அருள்பவன் - அருள் புரிபவன் ஆகிய. எம்பிரான் - எம் கடவுளே ; பிரான் - உபகாரி என்றும் ஆம். உனை - உன்னை. போற்றி - வாழ்த்தி. பணிய - வணங்க. பணித்தருள்வாய் - திருவுள்ளம் கொண்டு கட்டளையிட்டு அருள் புரிவாய். இவன் - அடியேன். எவன் - நம் அருளைப் பெற யார் ? என்று - என எண்ணி. பராமுகம் ஆய்விடின் - புறக்கணித்தால் ; அலட்சியமாக இருந்தால் ; ''பராமுகம் தவிர்தி'' (கந்தபுராணம், வள்ளியம்மை திருமணப் படலம், 72). என் செய்வன் - அடியேன் என்ன செய்வேன் ?

85. செய்யவன் மேனி - திருமேனி செந்நிறமாக உள்ளவன். செய்ய வேற்கையன் - இரத்தத்தினத்தால் சிவந்த வேலாயுதத்தை ஏந்திய கையை உடையவன் ; செம்மையாக அமைந்த வேற்கையை உடையவன் எனலும் ஆம் ; ''செய்யன் சிவந்த ஆடையன்'' (206),

''பவழத்தன்ன மேனி'' (குறுந்தொகை கடவுள்-2), ''உடையும் ஒலியலும் செய்யை'', ''உருவும் உருவத்தீ ஒத்தி'' (பரிபாடல், 19, 97-9), ''குன்றி கோபம் கொடிவிடு பவளம், ஒண்கெங் காந்தள் ஒக்கும் நின்னிறம்'' (தொல்காப்பியம், இடைச்சொல் இயல், 42, சேனாவரையர் மேற்கொள்), ''வென்றிச் செவ்வேள்'' (சிலப்பதிகாரம், 25 : 25). சிறுமி வள்ளித்தையலை - சிறுபெண்ணாகிய வள்ளியம்மையை. தண் தமிழ் முறை கொண்டு - இனிய தமிழ் மொழியின் முறையை மேற்கொண்டு. தழை அன்பினால் - மிக்க காதலினால். நையல் - ஊடல். களவுப் புணர்ச்சியை - ஒருவரும் அறியாமல் கூடி இன்புறுவதை, நாடியவன் - விரும்பியவன். ''தள்ளாப் பொருள்இயல்பிற் றண்டமிழாய் வந்திலார், கொள்ளா ; இக் குன்று பயன்'' என்பதும், 'இனி, அன்பு ஒவ்வாத கற்புப் புவத்தலாற் சிறந்தது ; அப் புலவியாவது, தான் வாயில் வேண்டலும் வாயில் நேர்தலும் ஆகிய இவை உள்ளீடாகத் தலைவன் பரத்தமையான் வருவது, இனிப் புதியதாகத் தோள் நுகரப்பட்ட பரத்தை இல்லின்கண்ணே ஒருத்தியை நாட்காலையே (காலை நேரத்தில்) செவ்வணி அணிந்து விட்டும், பூப்பு அறிவிப்ப, அப்பண்புறு கழறலால் தலைவன் வந்து உவக்கும் புணர்ச்சியை உடைத்து. அப்புணர்ச்சிகள்தாம் தலைவிக்குப் பாங்காயினார் கேட்டு, வருத்தம் உற, பரத்தையால் தன் மனைக்கண் அலர் (பழி மொழி) தூற்றப்பட்டுள, அப்புணர்ச்சி இன்பந்தான் உண்டாவது இயல்பான் அன்றி ஊடலான் ஆயது : அதனால், இக்கற்பிற் போலத் தலைவர் நீங்குவது அறியாத களவிற் புணர்ச்சியை உடைய மகளிர் அவரொடு மாறுகொண்டு (ஊடல் கொண்டு) துனிக்கும் (வருந்தும்) குற்றம் உடையவர் அல்லர் ; இப் புணர்ச்சியை வேண்டுகின்ற பொருள் இலக்கணத்தை உடைய தமிழை ஆராயாத தலைவர்கள் ஒழுக்கத்தைக் கொள்ள மாட்டார்' என்ற அதன் உரையும் இக்கருத்தை வலியுறுத்தும்.

கொய்மலர் கொண்டு - கொய்த மலர்களைக் கொண்டு ; கீழே விழுந்த மலரை எடுத்துக் கொள்ளாமல் மரத்தில் உள்ள மலர்களைக் கொய்தார்கள் என்றபடி. அடியார் - பக்தர்கள். துதி - தோத்திரம் செய்து வணங்கும். குன்றவனே - இரத்தினகிரியில் எழுந்தருளி இருப்பவனே.

86. குன்றாத - குறையாத. அன்பும் - பக்தியும். கொடுமை செய்யாத குணமும் - பிறருக்குத் தீங்கு செய்யாத நல்ல குணங்களையும், மயல் - காம மயக்கத்தை. ஒன்றாத - அடையாத. உள்ளமும் - மனமும். உன்பால் - நின்னிடம். அமையும் - பொருந்தும். நின்றே - நிலையாக நின்று ; ஏ : அசைநிலை ; தந்து - கொடுத்து.

நிலைபெறச் செய் - அந்தக் குணங்கள் அடியேனிடம் நிலையாக நிற்கும்படி அருள்புரிய வேண்டும். குன்றாப் புகழ் - மறையாத புகழையுடைய. உறை - எழுந்தருளியிருக்கும் ; நின்மல - மலம் அற்றவனே. பூரணனே - எங்கும் நிறைந்தவனே ; ''பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கமற நிற்கின்ற பரிபூர ணானந்தமே'' (தாயுமானவர் பாடல்).

87. பூரணம் ஆன பொருள் நீ - குறைவற்ற பரிபூர்ணமான பரவஸ்து நீ/ என - என்று, அறி புத்தி - அறியும் அறிவை ; புத்தி என்பது அகக்கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கினுள் ஒன்று ; நல்லது இது, கெட்டது இது என்று தெளிந்து அறிவது புத்தி. தந்தே - கொடுத்து, ஏ : அசைநிலை. ஏர் - அழகு, அளவும் - பொருந்தும். பண்பு - நல்ல குணங்களை. தந்தருள் - கொடுத்து அருள்புரிவாய். அன்றி - அல்லாமல், கதி - திக்கு ; ''கதிக்குவழி காட்டுகின்ற கண்ணே'' (திருஅருட்பா). காரணனே - எல்லாப் பொருளும் உண்டாவதற்குக் காரணமாக உள்ளவனே. கருணாகரனே - கருணைக்கு இருப்பிடம் ஆனவனே ; கருணையைச் செய்பவனே என்பதும் ஆம். கல் - மலை. ஆரணம் எல்லாம் - நான்கு வேதங்களும்.

88. அடைந்த - போர் செய்ய வந்த, வெம் சூரன்தனக்கும் - கொடிய குணங்களை உடைய சூரபத்மனுக்கும். அருள் தந்தவனை - அருளைக் கொடுத்த பால முருகனை ; ''என்பால் நண்ணினான் அமருக் கென்கை அருள்என நாட்ட வாமே'' (கந்தபுராணம், சூரபத்மன் வதைப் படலம், 141). எழில் - அழகு. மிடைந்து - மிகுதியாக அமைந்து. உயர் - உயர்வைப் பெற்ற. ஊர்தியாய் - மயில்வாகனத்தை உடையவனே. ஓங்கும் - உயர எடுக்கும். கொடியாய் - கோழிக் கொடியாக. விளங்க வைத்தாய் - விளங்கும்படி செய்தாய் ; அக்கணம் எம்பிரான்றன் அருளினால் உணர்வு சான்ற, குக்குட உருவை நோக்கிக் கடிதின்நீ கொடியே ஆகி, மிக்குயர் நமது தேரின் மேவினை ஆர்த்தி என்னத், தக்கதே பணி யீதன்ன எழுந்தது தமித்து விண்மேல்'', ''செந்நிறம் கெழீஇய சுட்டுச் சேவலாய்க் கொடிஒன் றாகி, முன்னுறு மனத்திற் செல்லும் முரண்தரு தடந்தேர் மீப்போய், இந்நிலை வரைப்பின் அண்டம் இடிபட உருமே றுட்க, வன்னியும் வெருவ ஆர்த்து மற்றவண் உற்ற தன்றே'', ''சீர்திகழ் குமர மூர்த்தி செறிவிழி கொண்ட தொல்லை, ஊர்தியின் இருக்கை நீங்கி உணர்வு கொண் டொழுகு கின்ற, ஆர்திகழ் மஞ்ஞை ஏறிச் சுமக்குதி எம்மை என்னப், பார்திசை வானம் முற்றும் பரிஎன நடாத்த லுற்றான்'' (கந்தபுராணம், சூரபன்மன் வதைப் படலம் 497-9) என்பவற்றைக் காண்க.

அடைந்திடும் - சோர்வடையும். நாயேனை - நாய் போன்ற அடியேனை ; நாய் ஒரு முறை உண்டு கக்கியதை மீண்டும் உண்ணும், அதைப்போல ஒருமுறை தீயதென்று விலக்கியதை மீண்டும் மேற்கொள்ளும் இயல்பு பற்றி ஆன்றோர்கள் பலர் தம்மை நாயேன் என்று சொல்லிக் கொள்வார்கள் ; ''நாயேனையும்இங் கொரு பொருளாக நயந்துவந்து, நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய்'' (அபிராமி அந்தாதி). உத்தமன் ஆக்க - உத்தம குணங்களை உடையவனாகச் செய்ய. தயை புரிவாய் - கருணை செய்வாய். உடைந்திடும் - சலனம் அடையும். உள்ளம் இலார் - உள்ளம் இல்லாத பக்தர்கள். போற்றும் - துதித்து வணங்கும். ஓங்கலனே - இரத்தினகிரியில் எழுந்தருளியிருப்பவனே.

89. ஓங்கும் - எங்கும் பரவியிருக்கும். புகழினால் - பல வகையான புகழ்களால். என் வரும் - என்ன பயன் உண்டாகும்? உணர்வதின்றி - இதை அறிந்து கொள்ளாமல். தாங்கும் - ஏற்றுக் கொண்ட. பதவியால் - உத்தியோகத்தினால். ஓர் பயன் - ஒரு பிரயோசனம். தகை - அழகு ; சிறந்த குணங்களும் ஆம். பாங்கு - இயல்பு. உடையாய் - உடைய பால முருகனே. உடை - உடைய. தேவ - கடவுளே. பரம்பரனே - மேலானவர்களுக்கும் மேலானவனே ; முழுமுதற் கடவுளே எனலும் ஆம். நீங்ககில் - முடிவு காணாத ; என்றும் நீங்காத என்றும் ஆம். சுத்த நின்மலனே - பரிசுத்தம் உள்ளவனும் மலம் அற்றவனும் ஆகிய பாலமுருகனே.

90. மலம் மூன்றில் - ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்று மலங்களில், சிக்கி - அகப்பட்டு. அறிவு அழிந்து - மெய்ப்பொருளை அறியும் அறிவை இழந்து. எள்ளும் - பிறர் இகழ்வதற்குக் காரணமாகிய. மதி - அறிவை. உடையேன் - உடையவன் அடியேன். தலம் ஒன்று - புனிதத் தலமாக நிலை பெற்ற. கிரி - இரத்தினகிரியில். உறை - எழுந்தருளியிருக்கும். பாலக - பாலமுருகனே. சற்குணனே - நிலையாக நிற்கும் நல்ல பண்புகளை உடையவனே. நலம் ஊன்று பண்பு கொண்டு - நன்மை நிலையாக நிற்கும் குணத்தை மேற்கொண்டு. பணியும் - வணங்கும். நலம் - நல்ல இயல்பை. தருவாய் - கொடுத்தருள்வாய். கிலம் இல்லவர் - சீவன் முக்தர் ; கிலம் - அழிவு. வேலவ - வேலாயுதத்தை உடைய பால முருகனே. மேலவ - எல்லாரிலும் மேலானவனே. கேண்மையனே - அடியார்களிடத்தில் அருள் உள்ளவனே.

91. கேட்டு ஆறும் தேறகில்லாதவன் - பல நூல்களைக் கேட்டும் யாரும், இவன் இத்தகையவன் என்று தெளியமுடியாதவன். கேளார் - பகைவர்களுடைய. கிறி-மாயம் ; ''கேட்டாயோ தோழி கிறிசெய்த

வாறொருவன்'' (திருவாசகம், 8:6). வேட்டார்க்கு - விரும்பிப் பணிந்தவர்களுக்கு. நல்லவன் - நல்லவனாக இருப்பவன். வேண்டுவ - விரும்பும் பொருள்களை. ஈந்து - கொடுத்து, ''வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்ட முழுவதும் தருவோய்நீ (திருவாசகம், குழைத்த பத்து, 6). விரும்பி - என்னிடத்தில் விருப்பத்தைக் கொண்டு. அருள் தேட்டை - அருளாகிய செல்வத்தை ; தெளிவு என்றும் ஆம். அளிப்பவன் - கொடுத்தருள்பவன். உறை - எழுந்தருளும். தேவன் - கடவுள். ஓட்டைக் குடம் ஆம் - ஒன்பது ஓட்டை உள்ள குடம்போல் இருக்கின்ற ; ஒன்பது ஓட்டைகளாவன ; கண்கள், நாசித் துவாரங்கள், காதுகள், வாய், மலத்துவாரம், சலத்துவாரம் என்பன. உடம்புள் - என்னுடைய உடம்புக்குள். புகுந்து - நுழைந்து. எனை - அடியேனை. உய்விப்பன் - உஜ்ஜீவனம் அடையச் செய்வான் ; ''உள்ளே புகுந்த விச்சை, மால்அமுதப் பெருங்கடலே,'' (திருவாசகம், திருச்சதகம் ;26).

92. உய்யும் வண்ணத்தை - உஜ்ஜீவனம் அடையும் முறையை. அறிகிலேன் - அறியும் ஆற்றல் இல்லாமல் அடியேன் இருக்கிறேன். தொண்டர் உறையும் இடம் - பக்தர்கள் வாழும் இடங்களை. எய்தி - அடைந்து. பணிந்து - அவர்களை வணங்கி ; ''உனதருள் மாறா, உளத்துள் அன்பினர் உறைவிடம் அறிகிலன்'' (திருப்புகழ், 7). போற்றும் - துதித்து வணங்கும். இயல் - தன்மையை. கற்றிலேன் - அடியேன் அறிந்து கொள்ளவில்லை. பொலியும் - விளங்கும். பேர் - திருநாமத்தை உடைய. வையும்படி - பிறர் என்னை நிந்திக்கும்படி, வையாமல் - வைக்காமல். வழுத்த - புகழ்ந்து வணங்க. வை - வைப்பாயாக.

93. வழுத்தி - துதித்து, வணங்கி - பணிந்து. அருட்பெயலால் - தேவரீருடைய அருள் ஆகிய மழையால், நனை - நனையும். மாண்பு -பெருமை. பழுத்த மனத்தினர் - கனிந்த மனமுடைய பக்தர்கள்; ''பழுத்த மனத்தடியர்'' (திருவாசகம், 24 :4). நல் அருள் - நன்மைகள் எல்லாம் தரும் திருவருளை. பற்றி நின்றார் - பெற்று வாழ்ந்தார்கள். அழுக்கு-மும்மலம். மனத்தினன் - மனத்தை உடைய அடியேன்; ''யான்பாவியேன், புழுக்கணுடைப் புன்குரம்பை பொல்லாக் கல்வி ஞானம்இலா, அழுக்கு மனத் தடியேன் உடையாய்நின் அடைக்கலமே'' (திருவாசகம், அடைக்கலப்பத்து, 1). பாசச் சுழியில் - பற்று என்னும் சுழிக்குள். அழுந்துகின்றேன் - உள்ளே புகுந்து வெளிவர மாட்டாமல் மேலும் மேலும் அழுந்திக் கொண்டே இருக்கிறேன். இழுக்கு இலார் - குற்றம் இல்லாத அடியவர்கள். போற்றும் - துதித்து வணங்கும். இறையவனே - கடவுளே ;

''இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு'' (திருக்குறள், கடவுள் வாழ்த்து, 5).

94. இறையவன் - கடவுள் ; எங்கும் தங்கியிருப்பவன் என்றும் ஆம் (இறுத்தல் - தங்குதல்). அருளின் மலையே - அருளில் மலைப்போல் இருப்பவனே ; ''அறிந்தோர் சொல் மலை'' (திருமுருகாற்றுப்படை, 263). எழில் ஏற்றம் உளாய் - பிறருக்கு இல்லாத அழகின் உயர்வை உடையவனே. மறையவனே - வேதத்தால் போற்றப்படுபவனே ; வேதமாக இருப்பவனே எனலும் ஆம் ; அந்தணனே எனலும் ஆம் ; ''வேத முதல்வன் என்ப'' (நற்றிணை, 1). பால - பாலமுருகனே. மணம் கமழும் - நல்ல வாசனை வீசும். நிறை கடப்பந்தார் - அழகு நிறைந்த கடம்பமலர் மாலையை. அணிபவனே - மார்பில் அணிபவனே. என்றும் - எக்காலத்திலும். நின்மலனே - மலம் மூன்றும் இல்லாமல் இருப்பவனே. உறை - உறைந்த. தயிரைக் கடைமத்தென - தயிரைக் கடையும் மத்தைப் போன்று, ''ஆயர் மத்தெறி தயிரின் ஆயினார்'' (சீவகசிந்தாமணி ; 421) ; ''ததிஉறும் மத்திற் சுழலும்என் ஆவி தளர் விலதோர், கதிஉறு வண்ணம் கருதுகண் டாய்'' (அபிராமி அந்தாதி, 7). உயச்செய்வை - உஜ்ஜீவனம் அடையச் செய்தருள்வாயாக.

95. செய்வது ஒன்று இன்னதென - உய்வதற்கு ஏற்ற செயல்களைச் செய்யும் செயல் ஒன்று இதுதான் என்பதை அறிந்து. அறியேன் - தெரிந்து கொள்ளாதவன் அடியேன். உய்வதை - உஜ்ஜீவனம் அடைவதை. எண்ணி - நினைந்து. வணங்கிலன் - அடியேன். தேவரீரை வணங்கவில்லை. தூர்த்தர் - கெட்டவர்கள் ; காமுகர் எனலும் ஆம் (திவாகரநிகண்டு). உறவு - நட்பை. பெய்வது போல - மழையாய்ப் பெய்வதைப் போல ; ''ஒல்லாது வானம் பெயல்'', ''பெயலும் விளையுளும் தொக்கு'' (திருக்குறள், 599, 545). அருள் தருவாயோ - திருவருளை வழங்குவாயோ? பிறப்பு இலனே - பிறப்பு இல்லாதவனே. ''அறவன் பிறப்பிலி'' (திருமந்திரம், 1616). செய் நலம் உள்ள - வயல்கள் நல்ல விளைச்சலை உடைய. இரத்தின வெற்பு உறை - இரத்தினகிரியில் எழுந்தருளியிருக்கும். சேவகனே - வீரனே ; ''சேவகன் ஆகித்திண்இலை ஏந்தி'' (திருவாசகம், 2:81).

96. முப்புரத்தை - மூன்று புரங்களை ; பொன் வெள்ளி இரும்புகளால் செய்யப்பட்டனவும் சிவபிரானால் எரிக்கப்பட்டனவும் விண்ணிற் சஞ்சரித்தனவுமான மூன்ற நகரங்களை ; இவற்றின் தலைவர்கள், வித்யுன்மாலி, தாரகாட்சன், மாவலிவாணன் என்பவர்கள். தரு -

பெற்ற. சேயவனே - மகனே. ஏவல் - வேலைக்காரர்கள். இடம் - வேலை செய்வதற்கு ஏற்ற இடம். பொருள் - செல்வம் ; இம் மூன்றையும் சேர்த்துச் சொல்லுதல் உலக வழக்கு, இலாத - இல்லாத. ஏழையின்பால் - அறிவு இல்லாத அடியேனிடம் ; ''ஏமுற் றவரினும் ஏழை'' (திருக்குறள், 873). வல் - விரைவில். மாசு ஒன்று - குற்றம் ஏதேனும், நிலவுறுமோ - உண்டாகுமோ ? பண்ணவன் - கடவுள்.

97. பரம் ஆனவனே - பரம்பொருள் ஆக இருப்பவனே. பரப்பு ஆனவனே -எல்லா உலகங்களிலும் பரந்து விளங்கும் தன்மையை உடையவனே; ''பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூர ணனந்தமே'' (தாயுமானவர் பாடல்). விண்ணவர் - தேவர்கள். ஏத்தி - துதித்து. பதவியை - நிலையை. வேட்டு - விரும்பி. நிற்கும் - நிற்பதற்குக் காரணமாகிய. கண்ணவனே - கண்ணைப் போன்றவனே. பால - பாலமுருகனே. கணங்கள் - தேவர் கூட்டமும் பக்தர்கள் கூட்டமும். புகழ் - துதிக்கும். எண்ணவனே - எண்ணாக உள்ளவனே. எழுத்து ஆனவனே - எழுத்தின் வடிவாக இருப்பவனே. ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' (பழம்பாடல்). இறையவனே - கடவுளே.

98. இறை அளவேனும் - அற்பமாகவேனும் ; இறை - அற்பம் ; ''இறையும் ஞானம்இல் லாதஎன் புன்கவி'' (கம்பராமாயணம், சிறப்புப் பாயிரம், 10). நிறைதரும் - நிறைவாக உள்ள, ஆசு - குற்றம். அன்றி - அல்லாமல், குறை அற - என் குறைகள் எல்லாம் நீங்க. செல்குவன் - போவேன். ரத்தினக் கோவெற்பினாய் - மேன்மையை உடைய இரத்தினகிரி என்னும் மேலான மலையில் எழுந்தருளியிருப்பவனே. நறை - தேன். கடப்பந்தாரினாய் - கடம்பமலர் மாலையை மார்பில் அணிந்தவனே. நாயகனே - கடவுளே.

99. நாய் அனையேன் - நான் நாயைப் போன்றவன். எச்சில் - பிறர் உண்டுவிட்ட இலையில் உள்ள எச்சிலை ; பெரியவர்கள் வெறுத்த பொருள்களை என்றபடி. நச்சி - விரும்பி. இனி - இனிமேல். நன்மை - உன் அருளைப் பெறும் தகுதி. அனையாய் - ஒப்பவனே. அருள் பால முருகா - அருளை உடைய பால முருகனே. தனி - ஒப்பற்ற. இரத்ன மாய கிரி - இரத்தின கிரி. அலல் - துன்பங்களை; இடைக்குறை. களைவாய் - போக்கியருள்வாய்,

போய பிழைகள் - இதற்குமுன் யான் செய்த குற்றங்களை ; ''போய பிழையும் புகுதருவான் நின்றனவும்'' (திருப்பாவை). புங்கவனே - கடவுளே (பிங்கலநிகண்டு).

100. புங்கவன் - தூய்மையை உடையவன் ; சிறந்தவன் எனலும் ஆம்; ''அமரர் புங்கவன் புந்தியின் ஓர்ந்தனன்'' (காசி கண்டம், துருவன் தவஞ்செய் படலம், 1). ஈசன் - பால முருகன். போக்கு - கதி; புகலும் ஆம் ''இலங்கை போக்கற '' (கம்பராமாயணம், மாயாசனகப் படலம்). இங்கு - இவ்வுலகத்தில். நீசக் குணத்துடன் - இழிவான குணத்தோடு. இரு - இருப்பாயாக. எனை - அடியேனை. ஏசுவையோ - பழிப்பாயோ ? எங்கு - வேறு யாரிடம். இனி - இனிமேல். போகுவேன் - போவேன். எவ்வாறு - எப்படி. நல் நலம் - நல்ல குணங்களை. எய்துவன் - அடைவேன். பொங்கிய - மிகுதியாக உள்ள. போதகனே - குருவே. ''நியதிபுரிந் தருள்வான் போதகன்'' (சைவ சமய ஆசாரக் கோவை, 30).

101. போதனை செய்து - உபதேசம் செய்தருளி. புகல் பெற்று - தஞ்சம் அடைந்தவனாக ஏற்றுக்கொண்டு. சாதனை - சாதனங்கள் ; காரியத்தைச் சாதித்தல் ; ''தவமார் சாதனை'' (பெருங்கதை, மகத காண்டம், 4 : 60). பழக்குவார் - பழக்கத்தை உண்டாக்குபவர்களை. கண்டிலன் - அறியேன். தாலம்-பூமி. வேதனையை - துன்பத்தை; ''வேதனை பெருகி'' (சீவகசிந்தாமணி, 2506). வீணே - ஒரு காரியத்தையும் சாதிக்காமல். அழிதல் - இறந்து போதல். விதி கொல் - தலைவிதியோ ? மாதலம் பெருமையைப்பெற்ற தலமாகிய இரத்தினகிரியில். மேவிய - எழுந்தருளிய. மாதவனே - கடவுளே ; முனிவனே எனலும் ஆம் ; ''மாதவர் நோன்பும் மடவார் கற்பும்'' (மணிமேகலை, 22 : 208).

102. மையல் மண்டி - மயக்கம் கொண்டு ; மாதர்பால் கொள்ளும் காமம் எனலும் ஆம் ; ''மையல்செய் தென்னை மனம்கவர்ந் தவனே என்னும்'' (திருவாய் மொழி, 2 : 6). மாதர்கள் - பெண்கள். ஈவார் - கொடுப்பார். பூதலம் - பூமி. போற்றும் - புகழ்ந்து வணங்கும். புண்ணியனே - கடவுளே. நீதமுடன் - முறையாக.

103. நினைந்தொறும் - நினைக்கும் போதெல்லாம். காண்தொறும் - காணும் போதெல்லாம். பேசும் தொறும் - பேசும் பொழுதெல்லாம். இன்பம் நேரும் - இன்பம் உண்டாகும். எனும் - என்று சொல்லும். வினைத்தொகை - பாவக்கூட்டங்களை. போக்கிய - தவிர்த்த. மாணிக்கவாசகர் - திருவாதவூரடிகள். மெய் உரையை - உண்மையான வார்த்தையை; இங்கே குறிப்பிட்டது, ''தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே,

நினைத்தொறும். காண்தொறும் பேசும்தொறும் எப்பொழுதும், அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன்சொரியும், குளிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும் பீ'' (திருவாசகம், திருக்கோத்தும்பி, 3) என்பதை அடியொற்றியது. எனைத்துணையேனும் - எவ்வளவாவது. ஏழை - அறிவில்லாதவன். என்செய்குவேன் - என்ன செய்வேன். அனைத்துணையாம் - தாயைப் போன்ற. பால - பால முருகனே.

104. நிறம் - தன்மையை, ''உன்நிறம் அறிந்தேன்'' (மணிமேகலை 4:96). எய்திடும் - அடையும். ஆறு - வழியை. தெருளும் - தெளிவு பெறும். திறம் - இயல்பு. இலேன் - இல்லாதவன். உடை - உடைய. திரு - அழகு. செல்வமும் ஆம், உருளும் - உருண்டுவரும், ''நின்கோயிலின் வாசல், அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும், படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே'' (பெருமாள் திருமொழி, 9) என்பது இதனோடு ஒரு புடை ஒத்திருத்தல் காண்க. இருளும் மனம் இலார் - அஞ்ஞானத்தை உடைய மனம் இல்லாத சான்றோர் ; ''உலகம் இருள்நீங்க இருந்த எந்தை.'' (சீவகசிந்தாமணி, 2812) போற்றிய - துதித்து வணங்கிய. தேவ - கடவுளே. இறையவனே - தலைவனே. எங்கும்நிறைந்தவனே எனலும் ஆம்.

105. திண்ணிதின் - உறுதியாக. நற்குகன் - நல்ல கருணையை உடைய முருகப் பெருமான். திருவடி - அழகிய திருவடிகளில். வீழ்ந்து - சாஷ்டாங்கமாக விழுந்து. எழுந்து - பிறகு எழுந்திருந்து. பணிந்து - மீட்டும் வணங்கி. தண்ணிய - குளிர்ந்த. நலம் பெறும் - நன்மைகளைப் பெறுகின்ற. அன்பர்க்கு - தன்னுடைய பக்தர்களுக்கு. நல் அருள் - நல்ல கருணையை. அளித்திடுவான் - வழங்குவான். பண்ணிய - நாம் செய்த. பாவங்கள் - தீய வினைகளால் வந்த பாவங்களை. போக்கிடு வான் - தீர்த்தருள்புரிவான். பலர் பால் - சான்றோர்கள் பாலிடத்தில். அன்பினை - அன்பை. எண்ணுற - அடையும்படி. செய்குவன் - திருவருள் புரிவான். ரத்னகிரியுறை - இரத்தின மலையில் எழுந்தருளியிருக்கும். இறையவனே - பால முருகனே. ஏ : ஈற்றசை.


106. வாழி - வாழ்க. வாழிய என்பது ஈறு குறைந்தது என்று எழுதுவர், நச்சினார்க்கினியர். இனிது - மனமகிழ்ச்சியோடு, பணிந்து - வணங்கி. உறை - வாழும். தொண்டர் - பக்தர்கள். நல் அறம் - நல்ல தர்மங்கள் யாவும். நல்லோர் - சான்றோர். நிறைவுற -

மனநிறைவு பெற்று. குறைவு அற - குறைவு இல்லாமல். கொழும் திருவோடு - வளமான செல்வத்தோடு. திரு - அழகுமாம். குறைவு அற - குறைதல் இல்லாமல். ''திருமகள்'' என்று முதல் பாட்டில் தொடங்கி, ''திருவோடு'' என்று முடித்ததை மண்டலித்தல் என்பர்.

## பயன்


எம்மான் - எம்பெருமான், சுவாமி, ''எந்தையே எம்மானே என்றென்றேங்கி'' (தாயுமானவர் பாடல்). விரித்த - விரிவாகச் சொன்ன. சற்றே - சிறிது. விளம்பி - சொல்லி, தரித்திட்ட - அணிந்த. இந்த நூல் - இந்த அந்தாதி என்னும் பிரபந்தம். ஓதுவார் - படுபவர்கள். எல்லாரும் - யாவரும். பந்தம் - பாசம். அற-நீங்க. நிற்க - நிலையாக நிலவுக - பரிந்து - அன்பு கொண்டு.

முற்றும்.



கல்தேர் பாலமுருகன்

K.P. Printset, Vellore - 2223502.



# திருக்குட முழுக்குக் காணும்
# கருங்கல் கருவறை இறைவன்

இந்நூல் அன்பளிப்பு : ஆர்டிசான் திரு. சண்முக பூபதி, சென்னை–17.